விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*

நீம்
வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்டது. சருமப் பாதுகாப்புக்கு மிகவும் சிறந்தது. இன்றே வாங்கி உபயோகியுங்கள்.

—ஓர் மில்க்வைற் உற்பத்தி

மலர் 19 வைகாசி 2 ஐ: அவ் 25 ஞாயிற்றுக்கிழமை [15—5—77] இதழ் 93

# தமிழர் சுயாட்சிக்கழகம்: மேலும் இரு தொகுதி வேட்பாளர் அறிவிப்பு!

## ஊர்காவற்றுறையிலேயே 'நவம்' போட்டியிடுவார்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

**தமிழர் சுயாட்சிக்கழகம் மேலும் இரு தொகுதிகளுக்கான தனது வேட்பாளர்களின் பெயர்களை நேற்று அறிவித்தது**

கோப்பாய், முல்லைத்தீவு ஆகிய இரு தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்களே நேற்று அறிவிக்கப்பட்டன. திருகோணமலை ஊர்காவற்றுறை தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் எற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய்த் தொகுதிக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றும் திரு. வி. ரி. ஜெயதேவனும் முல்லைத்திவுத் தொகுதிக்கு முள்ளியவளையைச் சேர்ந்த எழுத்தாளர் த. மதுபாலசிங்கமும் தமிழர் சுயாட்சிக் கழக வேட்பாளர்களாக நேற்று மாலை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் சுயாட்சிக்கழகத்தின் வேட்பாளர் நியமனக்குழு நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் தலைமையில் கூடியபோது மேற்படி இரண்டு தொகுதிகளுக்கான இரு அபேட்சகர்களும் தெரியப்பட்டனர். இவர்கள் இருவரும் இளைஞர்களாவர்.

வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, கிளிநொச்சி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, நல்லூர், மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அடுத்த வாரம் கூடவிருக்கும் இக்குழு மேலும் இரு தொகுதிகளை வெளியிடவிருப்

(10-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி - கூட்டணி தேர்தல் உடன்பாடு?

கொழும்பு, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்குமிடையில் தேர்தல் உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவேலைத்திட்ட மொன்றின் கீழ் இந்தப் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படலாமென்றும் அவர் தெரிவித்தார்.

திரு. செல்வநாயகம் இருக்கும் போதே இப்படியான ஒரு போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படக்கூடிய நிலை உருவாகிவந்ததென்றும் அவர் மறைவினால் அந்தத் தடங்கல் ஏற்பட்டு விட்டதாகவும், இருந்தபோதிலும் அப்படியான ஒரு தேர்தல் ஒப்பந்தத்திற்கான சூழ்நிலை மீண்டும் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சுதந்திரக்கட்சி அபேட்சகர்

(10-ம் பக்கம் பார்க்க)

### கூட்டணி நியமனக்குழு

## நல்லூருக்கு எம். சிவா உடுப்பிட்டியில்மாற்றமில்லை

### வட்டு தொகுதியில் மாற்றம் வரலாம்

கொழும்பு, சனி

நல்லூர்த் தொகுதிக்கு கூட்டணி அபேட்சகராக திரு. எம். சிவசிதம்பரம் நிறுத்தப்படுவாரென்பது அநேகமாக நிச்சயமாகிவிட்டது. உடுப்பிட்டித்தொகுதியில் கூட்டணி அபேட்சகராக திரு. இராசலிங்கமே போட்டியிடுவார்.

கொழும்பிலுள்ள திரு. எம். சிவசிதம்பரம் இல்லத்தில் நேற்றுக் காலையில் கூட்டணி நியமனக்குழு கூடியது. திரு. எஸ். தொண்டமான் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நியமனக் குழுக் கூட்டம் ஆரம்பமாகு முன்னர் திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம் அங்கு வந்து, திரு. எம். சிவசிதம்பரத்தைச் சந்தித்தார்.

கூட்டணி நியமனக் குழு முன்னிலையில் திரு. குமார் பொன்னம்பலம் நேர்முக ஆலோசனைக்கு அழைக்கப்பட்டார். குமார் ஒரு மணி நேரம் இந்த நேர்முகபேட்டி நடந்தது.

திரு. குமார் பொன்னம்பலத்திற்கு வட்டுக்கோட்டைத்தொகுதியை கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டதாகவும், அதற்கு அவர் முடிவு எதுவும் சொல்லவில்லையென்றும் தெரியவருகிறது.

இதன் பின்னர் முன்னாள் செனட்டர் திரு. சு. நடராசா நேர்முக ஆலோசனைக்குஅழைக்கப்பட்டார். அவர் திரும்பிச் செல்லும்போது எவருடனும் பேசவில்லை.

பொத்துவிலிலிருந்து ஒரு கோஷ்டியினர் வந்திருந்தனர். இவர்கள் பொத்துவிலுக்கு திரு. நடராசா தர்மலிங்கத்தையே நிறுத்தவேண்டுமென்றும், காசி ஆனந்தனை பொத்துவிலுக்கு அனுப்பவேண்டாமென்றும் கோரினார்கள்.

இக்கூட்டத்திற்கு திரு. ஞேஸ் டீ வாஸூம் வந்திருந்தார். நியமனக் குழுவின் முடிவுகள் நாளை நண்பகல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பத்தனை டெவன் தோட்டத்தில், பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்குப் பலியான இளைஞர்

(10-ம் பக்கம் பார்க்க)

## சட்ட அறிஞருள் அறிஞராகத் திகழ்ந்தார் அமரர் செல்வா

### பிரதம நீதியரசர் அஞ்சலி

கொழும்பு, சனி

சட்ட அறிஞர்களுள் அறிஞராகத் திகழ்ந்த அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் சட்டத்துறையில் ஆழமான அறிவும் பகுத்துணரும் மனப்பாங்கும் கொண்டிருந்தார். அவரின் மறைவு சட்டத்துறைக்கு மட்டுமல்ல, இலங்கை மக்களுக்கே பேரிழப்பாகும்''

இவ்வாறு நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அமரர் செல்வாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்திப் பேசிய பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் கூறினார்.

திரு. தென்னக்கோன் அவ்வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேலும் கூறியதாவது:

நீதிமன்றங்களில் அமரர் செல்வா தமது வாதங்களை இலகுவாக ஆனால் உறுதியுடன் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நிகழ்த்துவார்.

இதேபோன்றே அவர் அரசியலிலும் மாபெரும் தலைவராக விளங்கினார், அவரின் தன்னலமற்ற சேவையே அவரை அரசியலில் உன்னத நிலைக்குக் கொண்டுவந்தது.

**சிவா பசுபதி உரை**

சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி தமது உரையில் கூறியதாவது:

கடந்த சில மாதங்களாக தைரியமும் துணிவும் வாய்ந்த தமிழ்த் தலைவர்களின் மரணங்களை எதிர்நோக்கினோம்.

தாம்சரி என நம்பாத எதையும் ஒப்புக்கொள்ளாத தலைவராகத் திகழ்ந்த செல்வா தமது தன்னலமற்ற சேவைக்கும் கொள்கைக்கும் பெரும் வாய்ப்பாக அமைந்த சட்டத்துறையில் 1924ம் ஆண்டு பிரவேசித்தார்.

அவரின் நிதானமான கொள்கை, அயராத உழைப்பு கோபப்படாத சுபாவம், ஆழமான அறிவு ஆகியன அவருக்கு வெற்றிக்குமேல் வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

செல்வா ஆஜராகும் எந்த ஒரு வழக்கிலும் உண்மையை-

(10-ம் பக்கம் பார்க்க)

## காசி ஆனந்தனின் தந்தை காலமானார்

மட்டக்களப்பு, சனி

கவிஞர் காசிஆனந்தனின் தந்தை திரு. காத்தமுத்து நேற்று இரவு காலமானார்.

இவர் கடந்த ஒருவாரகாலமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (கி. இ.

# விளம்பரம்

## கைதடி கிராமசபை

## ஆதனவரி நடுக்கட்டல்

## உத்தியோகத்தர்களுக்கான பதவிகள்

1. கைதடி கிராமசபையினுல் ஆதனவரி நடுக்கட்டல் உத்தியோகத்தர்களுக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கைதடி கிராமசபைத் தலைவரினுல் கோரப்படுகின்றன.
2. தேவைப்படும் தகைமைகள்:-
   (அ) விண்ணப்பகாரர் உள்ளூராட்சி மன்றத்தினுல் அனுமதிக்கக் கூடிய தகைமைகள் உடையவராக இருத்தல் வேண்டும்.
   (ஆ) ஆகக் குறைந்தது எட்டாம் வகுப்புப் பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
   (இ) நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
   (ஈ) பிணைப்பணமாக ரூபா 250-ம், காப்புறுதிப் பொலிசி ரூபா. 250/-க்குமுடையவராக இருத்தல் வேண்டும். அல்லது பிணைப்பணமாக ரூபா 500/- செலுத்தவேண்டும்.
3. நியமன அந்தஸ்து:-
   (அ) மேற்படி நியமனம் முற்றிலும் ஒரு தரகு அடிப்படையிலானதாகும். நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் மட்டுமே வழங்கப்படும்.
   (ஆ) நிரந்தர தன்மைக்கான உரிமைக் கோரிக்கை எதற்கும் மேற்படி நியமனம் செல்லுபடியாகாது.
   (இ) ஒழுங்கீனம் காணப்படின் ஒருநாள் முன்னறிவித்தலின் பேரில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.
4. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சையின் பொழுது தங்களது குணநடை சம்பந்தமான இரு சமீபத்திய நற்சான்றுப் பத்திரங்களையும், வயதை நிரூபிக்கும் பிறப்புச் சான்றிதழையும், கல்வி சம்பந்தமான தகைமைச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் கைதடி கிராமசபைத் தலைவருக்கு முகவரியிட்டு 23-5-77-ந் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்திற் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆதன வரி நடுக்கட்டல் உத்தியோகத்தர்களுக்கான பதவிகள் பற்றிய விண்ணப்பம்" என்று குறிப்பிடல் வேண்டும்.

இவ்விடயம் சார்பான மேலதிகமான விபரங்களைக் கிராமசபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

இ. செல்லையா,
தலைவர்,
கைத்டி கிராமசபை.

கிராமசபை,
கைதடி, 12-5-77.

6190

# கொப்பரு தேவை

ஒரு கிழமைக்கு இரண்டு லொறி லோட் கொப்பரு தேவைப்படுகின்றது. இப்பொழுது நம்பர் I (ஏற்றுமதித்தாரதரம்) 1 பாரம் ரூபா 1100/-, நம்பர் II முதலாம் இரகத்திலிருந்து ரூபா 50/- கழித்தும், நம்பர் III இரண்டாம் இரகத்திலிருந்து ரூபா 75/- கழித்தும், எடுக்கின்றோம். நம்பர் IV இரகம் ரூபா 600/- ஆக கொள்வனவு செய்கின்றோம்.

விபரங்களுக்கு:

**கொள்வனவு முகாமையாளர்**
**சி. எஸ். கே. ஓயில் மில்ஸ்**
**யாழ்ப்பாணம்.** 6157

# தேவை [ஆண்கள்]

## யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி

கண்ணுடித் தொழிற்சாலைக்கு:

1. வேலை பழகுபவர்கள் (Apprentice)
2. குமிழர்கள் (Bubblers)
3. சூளை வேலைஅனுபவமுள்ளவர்களும் (Foreman) சூளைவேலை பழகுபவர்களும் (Apprentice)

தேவை. உடனடியாக நேரில் வரவும். வேலை பழகும் பொழுதும் சம்பளம் வழங்கப்படும்.

குமிழர்களுக்கு அனுபவத்திற்கும், திறமைக்கும் ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

6153

# வெல்டிங் பயிற்சி

வெல்டிங் பயிற்சி மாணவர்களே, வில்லுத்தகட்டை ஒட்டிப் பெற்ற கடித டிப்ளோமாவைக் கொண்டு வெளிநாடு சென்றவர்கள் படும் அவல நிலையை

**நியூ பிறிலியன் இன்ஸ்டிடியூட்**
இன்று (15-ம் திகதி) காலை 9 மணிக்கு

**பாலன் அயன் வேர்க்ஸ்**
409, கே. கே. எஸ். ரேட்டில்

நிரூபித்து காட்டவிருக்கின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, சனி

கொழும்பில் நேற்று முன்தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 614வது தேசிய சுவீப் முடிவுகள்:

முதலாவது பரிசு
**11 X 0083**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**09 A 0997**
ரூபா 40,000

மூன்ருவது பரிசு
**21 G 0498**
ரூபா 10,000

தலா 1,022 ரூபா ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 17 A 0745 | 42 A 0538 |
| 44 A 0952 | 50 A 0188 |
| 12 B 0344 | 20 B 0456 |
| 09 C 0150 | 14 C 0678 |
| 19 C 0489 | 41 C 0685 |
| 29 D 0998 | 37 D 0092 |
| 52 D 0442 | |
| 37 E 0041 | 44 E 0029 |
| 51 E 0563 | |
| 09 F 0156 | 14 F 0113 |
| 22 F 0787 | 31 F 0213 |
| 40 F 0894 | 46 F 0958 |
| 13 G 0980 | 15 G 0473 |
| 16 G 0401 | 49 G 0928 |
| 50 G 0757 | 51 G 0105 |
| 02 H 0640 | 18 H 0142 |
| 22 H 0396 | 43 H 0932 |
| 51 J 0756 | |
| 09 K 0228 | 12 K 0186 |
| 25 K 0965 | 28 K 0596 |
| 31 K 0322 | 32 K 0943 |
| 35 K 0272 | |
| 06 L 0373 | 21 L 0514 |
| 32 L 0148 | 43 L 0380 |
| 07 M 0117 | 09 M 0109 |
| 11 M 0608 | 16 M 0578 |
| 23 M 0171 | 32 M 0511 |
| 37 M 0960 | 39 M 0992 |
| 45 M 0475 | 47 M 0934 |
| 05 N 0257 | 25 N 0126 |
| 32 N 0162 | 36 N 0105 |
| 39 N 0409 | |
| 02 P 0911 | |
| 11 Q 0491 | 17 Q 0276 |
| 17 Q 0806 | 40 Q 0539 |
| 04 R 0830 | 31 R 0983 |
| 36 R 0421 | 37 R 0622 |
| 43 R 0598 | 44 R 0540 |
| 50 R 0610 | |
| 09 S 0505 | 15 S 0383 |
| 17 S 0804 | 23 S 0656 |
| 23 S 0848 | 27 S 0930 |
| 31 S 0805 | 33 S 0551 |
| 46 S 0008 | |
| 06 T 0582 | |
| 02 U 0681 | 13 U 0296 |
| 32 U 0234 | 50 U 0929 |
| 19 V 0949 | 20 V 0840 |
| 32 V 0445 | 37 V 0936 |
| 49 V 0988 | |
| 06 W 0850 | 10 W 0596 |
| 04 X 0591 | 05 X 0018 |
| 33 X 0099 | |
| 06 Y 0712 | 21 Y 0933 |
| 30 Y 0633 | |
| 44 Z 0782 | 48 Z 0616 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

33 ஸ்ரீ 8000 தொடரிலக்கமுடைய முற்றிலும் திருத்தியமைக்கப்பெற்ற 10 அந்தர் பொருட்கள் ஏற்றக்கூடிய லாம்புறே ஸ்கூட்டர் வான் விற்பனைக்கு உண்டு. மூன்ருவது உரிமையாளர், பெற்ரேல் கலன் ஒன்றிற்கு 60 மைல் வேலை செய்யக்கூடியது. விபரங்கட்கு: விஜயா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6180

12 போர் புதிய வின் செஸ்ரர் துவக்கு பர்மிட் வைத்திருப்பவர்களுக்கு மட்டும் விற்பனைக்குண்டு. மாலை 5 மணிக்கு பின் தொடர்பு கொள்க. Dr. பரமேஸ்வரன், 655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 6170

சகல வசதிகளும் உள்ள வீடு யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெருவில். ஒரு ஆபீஸ் அறை, இரண்டு படுக்கை அறைகள், ஒரு களஞ்சிய அறை, சமையலறை, குளியலறை, கராஜ், பெரிய ஹோல் சாப்பாட்டுஅறை அடங்கியது. தொடர்புகொள்க: V.A.சிவம்பிள்ளை, C/o திருமதி D. ஞானப்பிரகாசம், 99 1/1, மூன்ரும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 6000

## சேவை

மணமகன் தேவையா? அல்லது மணமகள் தேவையா? உடனே தொடர்பு கொள்க: V. நடராஜா, மே/பா ஈஸ்வரன் கெமிக்கல் ஸ்ரோர்ஸ், மாசிவன் சந்தி, சுன்ஞகம் வீதி, நீர்வேலி. 6175

## இலவசம்

"வேல்களிலே சிறந்த வேல்" "வேல்களையே வெல்லும் வேல்" கருத்தாழம் மிக்க சமய துண்டுப் பிரசுரம். தேவையானேர் எழுதுங்கள். இலவசமாக அனுப்பப்படும். த. இ. இன்பநாதன். சரசாலை, சாவகச்சேரி. 5984

## தேவை

பருத்தித்துறையில் உள்ள வைத்தியசாலைக்கு அனுபவமுள்ள, அல்லது பயிற்றப்பட்ட பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் நிர்ணயிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும். விளம்பர இல: 6172, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6172

சுத்தமான வேப்பம்பூ தொகையாகத் தேவை. தகுந்த விலையில் கொள்வனவு செய்யப்படும். Dr. R. மங்களாம்பிகை, மங்களபதி வைத்தியசாலை, 82/6, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். 6159

## வகுப்புகள்

லண்டன் (சிற்றி-கில்ட்ஸ்) எலெக்றிக்கல் என்ஜினியறிங் புதிய பாடத் திட்டங்களின் வகுப்புகளுக்கு. ஸ்ரீசத்யதாஸன் (விரிவுரையாளர்) யாழ்ப்பாணக் கல்விநிலையம் இராமையாச் செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். 6188

4-3-77-ல் வெளியான வர்த்தமானியின்படி அங்கீகரிக்கப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியராக விண்ணப்பித்தவர்களுக்கும் விண்ணப்பிக்க இருப்பவர்களுக்கும் மேலதிக அறிவுக்கான பயிற்சி வகுப்புகளும் விரிவுரைகளும் ஜூன் மாதம் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு: பதிவாளர் விஸ்வபாரதி சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 6187

ஆங்கில விசேட வகுப்புகள் 1977 டிசம்பர் மாதம் க.பொ.த. (சாதாரண) தேர்வு ஆங்கில பாடத்திற்கு தோற்றவிருக்கும் பரீட்சாத்திகளுக்கான வகுப்புகள் இம்மாதம் 16-ந் திகதி (16-5-77) ஆரம்பமாகும். மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். கணக்கியல் கல்லூரி, 57, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 6129

## வாடகைக்கு

பலதரப்பட்ட பகுதி வீடுகள். தரமான சிறு குடும்பம், உத்தியோகஸ்தர். 19, கடைச்சாமி வீதி, நீராவியடி, வண்ணர்பண்ணை. 6185

## CLASSES

ICMA, ACCA November 1977 Accountancy classes just commenced. Time Saturdays 2-5 p.m. Sundays 8-12 a.m. at the Education Centre No. 22, Ramiah Chettiar Lane, Hospital Rd., Jaffna. 6181

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு ஸ்ரீ வண்ணை சிவன்கோயிலில் பிரதோஷ தினமாகிய இன்று மாலை 4-45க்கு நந்தியெம்பெருமானுக்குப் பிரதோஷ பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதி உலா வருவர். (இ)




# Pandateruppu Parish Multi Purpose Co-operative Society Ltd.

## VACANCY

### POST OF INDUSTRIAL CHEMIST

(1) Salary Scale — Rs. 400/- -- 650/- / 15x10—20x5. Salary point negotiable.

(2) Qualification —
(i) Graduate in Chemistry
or
(ii) Science Graduate with Chemistry as a subject.
or
(iii) G. C. E. (A/L) in four subjects with credit pass in chemistry and 4 years experience in similar capacity.

(3) Age limit: Between 25 & 50 years.

(4) Selected candidate will be on probation for one year.

Applications under registered post should reach the General Manager on or before 4-00 p. m. on 30-05-1977.

The envelope should be marked "Application-Post of Industrial Chemist."

**General Manager**

PANDATERUPPU PARISH M. P. C. S. LTD.

6149



# ஒரு பட்டதாரி சம்பளம் எடுக்கிறான்

செல்வி. இ. ஜே. செல்வத்துரை

அடுத்த வீட்டு ரேடியோவில் கிறிஸ்தவ நற்சிந்தனை சொல்லிக்கொண்டிருந்தது. நேரம் ஆறேகாலாக இருக்க வேண்டுமென எண்ணுகின்றேன். எனக்கிருந்த பரபரப்பைவிட என் அம்மாபடும் பரபரப்பைப் பார்க்க எனக்கே பாவமாக இருந்தது. அதிகாலையிலேயே எழுந்து புட்டும், சம்பலும் செய்து, வீடு கூட்டி, முத்தம் கூட்டித் தண்ணீர் தெளித்து- அம்மாவை நினைக்க பாவமாகவே இருந்தது. கல்விக் கந்தோரிலிருந்து எப்போ எனக்கு பட்டதாரி நியமன நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் வந்ததோ, அன்றிலிருந்து அவருக்குப்பரபரப்புத்தான், இன்று நேர்முகப்பரீட்சை யானபடியால் பரபரப்பு சற்று அதிகம். ''இராசா இதைக் குடியுங்கோவேன்'' என்று தாயார் தந்ததை மறுக்கத் திராணியில்லை, அன்பு முகத்தைப் பார்த்தபடியே அருந்தினேன்.

நான் பட்டதாரியான பொழுது என்தயார் அடைந்த மகிழ்ச்சி. சிறுவயதிலேயே தந்தையை இழந்தவனாக இருந்தும் தாயாரின் அன்பினாலேயே வளர்ந்தேன்; கல்வி கற்றேன். அவர் என்னை வளர்த்த விதம்... ஓ... இதனால்தான் 'தாயில்லாமல் நானில்லை' ''அன்னையைப்போல் உலகிலே தெய்வம் உண்டோ'' என்றெல்லாம் கவிஞர்கள் பாடுகின்றார்கள். என் மேற்படிப்பை என் கிராமத்தவர், அயலவர் வெறுக்கின்றார்களென அறிந்தும், சர்வகலாசாலைப் படிப்பை நான் முடித்து ஒரு பட்டதாரியானேன் என்றால், இதற்கெல்லாம் என் அன்னைதான் காரணம். நானும் பட்டதாரியானேன். என் பட்டதாரிப் படத்தை பெரிதாக பிரேம் போட்டு! வீட்டின் நடுக்கூடத்தில் மாட்டவேண்டுமென்று சொன்னதே என் அன்னைதான்.

படிப்பு முடிந்த உடனேயே வேலை கிடைக்காவிட்டாலும், ரியூஷனால் நன்றாகத்தான் உழைத்தேன். எனினும் என்னை ஒரு அரசாங்க உத்தியோகத்தனாகக் காண்பதையே என் தாயார் விரும்பினார். அதற்கும் நான் மறுப்புக்கூறவில்லை. அவரில்லாவிட்டால் என் நிலை எவ்வளவு தாழ்ந்திருக்கும், நான் என் பெயருக்குப் பின்னால் இரண்டு எழுத்துக்களைக் கொண்டு நிற்பதற்கு என் அன்னைதானே காரணம். அவர் எண்ணத்தின்படியே அரசாங்கத்திடமிருந்து தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களைத் தெரிந்தெடுக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. மனுச்செய்தேன், அரசாங்க ஆசிரியரானேன், எனக்குத் தெரியும் என் அன்னை ஏன் அரசாங்க உத்தியோகத்தைவிரும்பினாரென்று.

''உலங்களுக்கு எங்கே கவுன்மேந்து உத்தியோகம் கிடைக்கும், ரியூஷன் தான் கொடுத்து உழைக்கவேண்டும்'' என்று அம்மாவின் தூரத்து உறவினரான சின்னச்சாமி மாமா கூறினதாக என் நண்பர்கள் என்னிடம் ஏற்கனவே தெரிவித்துள்ளார்கள். என் அன்னையின் உள்ளக்குமுறலை மென்மேலும் அதிகமாக்குபவர்கள் என் அயலார்தான். என் அன்னையின் ஆசைகளை மறு வார்த்தையின்றி நிறைவேற்றுபவன் நான். அயலாரின் எண்ணப்படி நான் ஆட்டுவிக்கப்பட்டேன் என்பது மிகவும் பொருத்தமாக இருந்தது. எனக்குத் தெரியும் ஊரவரின் பழிப்புப்பற்றி. ஒருவரை தாழ்த்துவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்ப்பவர்கள், கிடைக்கும் அரியபெரிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தாமல் விடுவார்களா?

நான் அரசாங்க ஆசிரியனாக நியமிக்கப்பட்டதும் என் அன்னை அடைந்த ஆனந்தம், இன்னொருமுறை ஆசிரியனாக மாட்டேனா, என் ஜெயத்தைக் கண்டு அன்னை ஆனந்திக்கமாட்டாளோ என்று என் உள்ளம் ஏங்கியது.

இரு மாதங்களுக்குப் பின் என் அன்னையின் முகத்தை இருள்மூடத் தொடங்கியது. காரணம் பழையபடி ஊராரின் நையாண்டி மொழிகள் தான். எப்படித்தான் அரசாங்க ஊழியனாகஇருந்தாலும் தராதரத்துக்கேற்ற சம்பளமில்லையே என்பதுதான் அவர்களது அப்போதைய நையாண்டியாக இருந்தது. என் அன்னை சிறிது நேரம்கூட சந்தோஷமாக இருப்பதை என் அயலார் வெறுக்கின்றனர் என்பதை நன்றாக அறிந்துகொண்டேன்.

''என்ன ரர்சா சம்பளம் வருமே'' -இதுதான் அவருடைய அன்றாட கேள்வி.

''ஓமெணை வரத்தானே வேணும்'' இது என் பதில். என் சம்பளம், குறைவானபடியால்தான் மரக்கறித்தோட்டம்மூலம் அதை ஈடுசெய்துவந்தேன். 'என்ன இருந்தென்ன? என் அன்னைக்கு யார் ஆறுதல் கூறுவார்?' என்று குமுறினேன்.

மறு நாள் பாடசாலைக்குச் சென்றபொழுது என் நண்பன் கூறிய செய்தி பட்டதாரிகள் யாவருக்கும் மிக விரைவில் முழுச்சம்பளம் வழங்கப்படப் போகின்றது என்பதே. ஓ! அச் செய்தி அந்தவேளையில் எனக்கு எவ்வளவு இதமாக இருந்தது. உலகமே பசுமையாகி விட்டதை, அதன் தன்மையில் மயங்கி நின்றதை இன்று எண்ணினாலும் குளிருகின்றதே. அன்னையின் இனிமையான முகம் தான் கண்ணெதிரே இருந்தது. ''அம்மா உன் ஆசை நிறைவேறப் போகின்றது'' மானசீகமாகக் கூறிக்கொண்டேன். அன்று பாடசாலை விட்டுச் சென்றவுடன் என் அன்னை என்னைப்பார்த்து வடித்த ஆனந்தக் கண்ணீருடன் என் கண்ணீரும் சங்கமமாகத் துடித்த அந்தக்காட்சி!

இன்று எல்லாவற்றிற்கும் ஒரு நிறைவைத்தரும்வகையில் நேர்முகப்பரீட்சைக்கு ஆயத்தமாகியுள்ளேன். இன்றுடன் என் அன்னையின் ஏக்கம் ஆசை யாவும் பூர்த்தியாகிவிடும் என்ற நினைவே என் நெடுநாள் மனச்சுமையைக் கரைப்பது போன்ற உணர்வு. ஓ! பழைய நினைவுகளினால் நேரம் போனதே தெரியவில்லை, ''அம்மா போய்ட்டு வாறனணை'' என்றபடி பஸ் நிலையத்தை நோக்கிச் சென்றேன்.

பஸ் நிலையத்தில் அறிந்தவர்கள் யாவரும் என் நேர்த்தியான உடையையும், கையிலிருந்த பையையும் பார்த்தபடி 'என்ன தம்பிஇண்டர்வ்யுவே' என்றார்கள். நானும் சளைக்காமல் பதில் கூறியபடி இருந்தேன்.

பஸ் வந்ததும், ஏறிஅமர்ந்து கல்வி இலாகாவை அடைந்தேன். நேர்முகப்பரீட்சை எதிர்பார்த்தபடி விரைவில் முடியவில்லை. மதிய உணவிற்குக்கூட என்னால் செல்லமுடியவில்லை, பின்னேரம் மூன்றரை போல் தான் முடிவடைந்தது. வேலையெதுவுமின்றி நின்ற களைப்பு அதிகமாக இருந்தாலும், பட்டதாரிச் சம்பளத்துக்கு உரியவனாகப்போகிறேன் என்ற நினைப்பு என் களைப்பையெல்லாம் நீக்கிவிட்டது.

வீடுநோக்கிச்சென்றுகொண்டிருந்த என் கண் முன்னால் புரட்டாதிமாதச் சம்பளப்பட்டியல்தான் கண்ணெதிரேநின்றது. ஞானசிகாமணி என்ற என் பெயருக்கு நேரே என்தராதரமும், என் சம்பளமும்இடப்பட்டிருக்கும். அதை நான் எடுப்பேன், என் தாயாரிடம் சமர்ப்பிப்பேன். என் தாயார் என்னைப் பெருமிதம் கலந்த பார்வை பார்ப்பார். ஓ! எத்துணை இன்பம். நாட்களென்ன காரணத்தினாலோ அசைந்துகொண்டுதான் சென்றன.

செப்டம்பர் இருபதாம் திகதி சம்பளப் பட்டியலைப் பார்த்த கண்கள் செயலற்றுப் போவதை என்னால் உணரமுடிகின்றது. இம்முறையும் சம்பளம் வரவில்லை. என்கோட்டைகள் சரியலாம், ஆனால் என் அன்னையின் மனக்கோட்டைகள் சரியக்கூடாதே. ''என்ன ஞானம்'' இந்த முறையும் ஸ்கேல் போடவில்லையோ'' அதிபரின் குரல் என்னை உலுப்பிற்று. நிமிர்ந்தால் என் கலங்கிய கண்களை வேதனைக் குமுறலைப் பார்த்து விடுவாரோ என்றபயத்தில் ''இல்லை சார்'' என்றேன். ''ஐஸே கவலையை விடும் அடுத்த மாதம் வரும்'' என்றார் அதிபர். ''ஐயா நீங்கள் என்னைத் தேற்றுவீர்கள், என் அன்னையை நான் எப்படித் தேற்றுவேன்'', உள்ளத்திற்குள்ளேயே குமுறினேன் நான்.

வீடு சென்ற பொழுது என் அன்னை என் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்தே புரிந்துகொண்டு, என்னைத்தேற்றினார். ''எப்படியும் தருவினைதானே எல்லாருக்கும் குடுத திட்டினியாம், இங்க யாழ்ப்பாணத்திலைதான் தரவில்லையாம் உண்மையோ'' எனக் கேட்டார். ''ஓமெணை'' என்றேன்.

''ஆண்டவா, எனக்காக இல்லையெண்டாலும் என் அன்னைக்காக என் பட்டதாரிச் சம்பளத்தை தரச்செய்திடும் என் இயேசுவே'' வாய்விட்டே இரைந்துவிட்டேன், என் அன்னையைத் திடுக்குற்றவாறு திரும்பி நோக்கினேன், வெடித்துக் கொண்டு வந்ததுயரத்தை அழுகையினூடாக வெளிக்காட்டியபடி என்னை அணைத்துக்கொண்டார்.

நாட்கள் ஓடியபடியே இருந்தன. அடுத்தமாதச் சம்பளப் பட்டியலும் வந்தது. எனக்குரிய சம்பளத்தைக் கொண்டு வரவேயில்லை. வேதனையைச் சுமந்தபடி வீடு திரும்பிய என் அருகில் கார் 'பிரேக்' போடும் சத்தம் கேட்டது. ''ஞானம் கெதியிலே வாரும், உம்முடைய அம்மா திடீரென்று மயக்கமாகிவிட்டா'' எனது நண்பன் நேசன் அவலக்குரல் கொடுத்தான். 'நேசன்' என்றபடி அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டேன்.

எதுவோ புரிந்தும் புரியாததுமான நிலைமை வீட்டுவாசலுக்குச் சென்றதும் அங்கு நின்றவர்களை விலத்திக் கொண்டு உட்சென்றேன். அன்னையின் மீளாத்துயில் அடைந்துவிட்ட நிலையையே கண்டேன்.

''அம்மா நீ போய்விட்டாய், உன் எண்ணங்கள், ஆசைகள் இவற்றை என்னால் நிறைவேற்ற முடியவில்லையே'' என்று வாய்விட்டே குமுறினேன். என் துயர் யாரால் தான் துடைக்கமுடியும்.

யாழ்ப்பாணத்திலே நான் ஒரு பட்டதாரி ஆசிரியராக வேலைபார்க்காமல் வேறிடத்திலே பார்த்திருந்தால் என் அன்னையின் ஆசைகளை நிறைவேற்றியிருக்கமுடியும், யாரை நான் நோவேன்? என் நிலை யார் அறிவார்? என் மனவேதனை யார் துடைப்பார்? என் மனக்குமுறல் கண்ணீராக வெளிவந்தது. கண்ணில் உள்ள நீர் வற்றியதும் என் கண்ணீர் நின்று போகலாம், ஆனால் என் உள்ளத்திலே என் அன்னையின் ஆசையை நிறைவேற்றாத ஏக்கம், வேதனை இவை என்றுதான் குறையும். ஒரு நீண்ட பெருமூச்சைத் தான் என்னால் விடமுடிந்தது.

(யாவும் கற்பனை)

## இரத்த தானம்!

சுப்பையா: என்ன உன்னுடைய கையில் சேட்டில் எல்லாம் இரத்தம்?

அப்பையா: கையொப்பம் வைத்ததால்தான்.

சுப்பையா: எதற்குக் கையொப்பம்?

அப்பையா: எங்கள் தலைவருக்கு வேட்பாளர் நியமனம் கேட்டு ஊரிலுள்ள எல்லோருக்

காகவும் இரத்தத்தில் கையொப்பம் வைத்தேன். அதுதான்...

— 'முருகு'

1973ம் ஆண்டு இந்தியப் பல்கலைக்கழகக் கல்லூரிகளில் கலைச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்கு ஓவியர் பெனடிக்ற் சென்றிருந்த பொழுது டில்லி நகர்சென்றதும் முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் ஆதரவுடன் அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தியை அவரது செயலகத்தில் பேட்டி கண்டார். திருமதி காந்தி ஓவியரை மன மகிழ்வுடன் வரவேற்றுப் படம் எழுதச்சம்மதித்தார்.

'உங்களுடைய எடுப்பான மூக்கைப் போல எப் பெண்ணிடமும் நான் கண்டதில்லை; ஆதலால் பக்கவாட்டில் நின்றால் சிறப்பாக ஓவியம் அமையும்' என்று ஓவியர் கூறவும் அவ்வாறே பிரதமர் நின்றார். அப்போது தீட்டப்பட்ட ஓவியம் இது.



நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

## நான் சந்தித்த அரசியல் தலைவர்கள்-2

# துணிச்சலுக்கு ஒரு சுந்தரலிங்கம்!

**கா. யோகநாதன்**
(ஈழநாடு பிரதம நிருபர்)

ஈழத் தமிழ் தலைவர்களில் துணிச்சல் மிக்க ஒருவர் திரு. சி. சுந்தரலிங்கம் என்றுசொன்னால் மிகையல்ல. கடந்த கால் நூற்ருண்டு காலமாக, எந்த விஷயத்திலும், துணிச்சலுடன் செயலாற்றக் கூடியவராக அவர் விளங்கிவந்தார். ஆட்சி மன்றத்திலும் சரி, நீதிமன்றத்திலும் சரி, மற்றும் பொது இடங்களிலும் சரி, அவருக்குத் துணிச்சலே பக்கபலமாக இருந்துவந்துள்ளது அதனுல்தான் 'அடங்காத்தமிழர்' என்ற பெயரைப் பெற்ருர்.

சுந்தரரின் துணிச்சலை பல சந்தர்ப்பங்களில் இளைஞர்கள் வரவேற்றிருப்பதை நேரில் கண்டிருக்கிறேன். 'சுந்தரர்' தோன்றினுல் அங்கு இளைஞர் மத்தியில் ஒரு உணர்ச்சி, உற்சாகம் தோன்றுவதைப் பார்த்திருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம் அவரது துணிச்சல் ஒன்றுதான். எதற்கும்அஞ்சாதவர் என்ற நிலையை அவர் உருவாக்கியிருந்தார்.

85 வயதானுலும், வாலிபு மிடுக்கும், நிமிர்ந்தநடையும், நெஞ்சுரமும், சுறுசுறுப்பும், கொள்கைப்பற்றும், கெம்பீரமான தோற்றமும், எந்தஇடத்திலும் அவரை துலாம்பரமாக எடுத்துக்காட்டக் கூடியதாக இருந்தது.

### துணிச்சலே துணை

ஆட்சி மன்றத்தில் சபாநாயகர் உத்தரவை மீறியபோதும், கதிரையுடன் வெளியேற்றப்பட்டபோதும், பின்கொழும்பு மாநகரவீதியில் மறியல்செய்தபோதும், இரவில் காடையர்கள் கல்வீசி கேலி செய்தபோதும், பின் பொலிஸ் நிலையத்தில், பொலிசாரின் விருந்தினராக தங்கியிருந்தபோதும், மட்டக்களப்பில், தமிழரசாரின் செல்வா-பண்டா ஒப்பந்தத்திற்கு எதிராக தனிமனிதனுக நின்று அதனை ஆட்சேபித்தபோதும், 58ம் ஆண்டுகலவரத்தின்போது கடவுளேபேசுவார் -காடுகளே சுடும்' என்ற மந்திரத்தால், ஆயிரக்கணக்கான காடையர்களை விரட்டியடித்தபோதும், மாவை கோவில்சம்பவங்களின்போதும், அவரின் துணிச்சலே அவருக்குப் பக்கபலமாக கைகொடுத்தது.

அவரை எத்தனையோ முறை எத்தனையோ இடத்தில் சந்தித்திருக்கிறேன். பேசுவதற்கு இனியவர். பழகுவதற்கு பண்பானவர்,

60ம் ஆண்டு தேர்தலின் போது கொடிகாமம் சந்தையில் அவர் ஒரு பிரசாரக் கூட்டம் நடத்திஞர்.

அப்பொழுதெல்லாம் அவரது பெரிய காருக்குமேல் சிறிய ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். காரில் திரு. சுந்தரலிங்கமும், பாரியாரும், பிரசாரத்திற்காக கிராமம்கிராமமாகச் சென்று கொண்டிருப்பார்கள். அச்சமயம் கிளிநொச்சி தொகுதியில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி சார்பில் திரு. சரவணமுத்து போட்டியிட்டார். இவரும், சுந்தரர் போன்று துணிச்சல் மிக்கவர். அவரது சிஷ்யன் என்றே சொல்லலாம். தனிநாட்டு கொள்கையில் பற்றுக் கொண்டு, பென்ஷன் காலத்திற்கு முன்னரே அரசாங்க உத்தியோகத்தை உதறித்தள்ளியவர். கிளிநொச்சியில் அவர் வெற்றிபெறும் வாய்ப்பை இழந்தாலும், தொடர்ந்து 'தனிநாடு' பிரசார பீரங்கியாக விளங்கி, தன் உயிரை அர்ப்பணித்தார். ஆனுல் இன்று தமிழினம் அந்த இளம் தியாகியை மறந்துவிட்டது.



அமரர் சரவணமுத்து தான் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அன்று வெள்ளிக்கிழமை நண்பகல் நேரம் சந்தையில் மக்கள் திரண்டிருந்தனர். முதலில் திரு. சரவணமுத்து தலைமையுரை ஆரம்பித்த போதே மக்கள் கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். சாவகச்சேரியில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி போட்டியிடவில்லை. ஆனுல், கிளிநொச்சியில் கமம் செய்பவர்கள் பலர், மீசாலையிலும், கச்சாய்,கொடிகாமத்திலும் இருந்தார்கள். அவர்களின்ஆதரவைத்திரட்டுவதற்காகவே இக் கூட்டம் நடந்தது.

### கல்லெறி விழுந்தது

நிலைமைமோசமாகவே திரு. சுந்தரலிங்கம் பேச ஆரம்பித்தார். அவர் பேசத் தொடங்க கல்லெறி விழத் தொடங்கின. ஒரு பக்கத்தில் சொல்மாரி; மறுபக்கத்தில் கல்மாரி; அவரின் துணிச்சலை அன்றுதான் நேரில் கண்டேன். மேசையில் வந்துவிழுந்த ஒரு கல்லை அவர் எடுத்து 'தனிநாட்டைஅமைப்பதற்கு இதுதான் முதல்அத்திபாரக்கல். இந்தக்கல்லை வீசிய என் நண்பருக்கு எந்நன்றி' என்று கூறிஞர். அதன்பின் கல்வீச்சு இடம் பெறவில்லை. மக்கள் கேள்விக்கணைகள் தொடுத்தனர்.

கச்சாய் கிராமசபை உறுப்பினர் ஆ. கனகரத்தினம் (இராசு என்ற இளைஞர் பல கேள்விகளைக்கேட்டு. கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஆதரவாக பல இளைஞர்கள் பேசிக் கொண்டிருந்தனர். தீவுப்பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞர் மேடைக்கேவந்து கேள்விகள் கேட்டார். சுந்தரர் ஒவ்வொரு கேள்விக்கும் விடையளித்தார். என் தனிநாட்டுக் கொள்கையை இன்று நீங்கள் எதிர்க்கலாம். ஆனுல் எதிர்காலத்தில்அதுதான் தமிழினத்தின் ஏகோபித்த கோரிக்கையாக இருக்குமென்று சுந்தரர் கூறிஞர். அவர் அன்று கூறியது இன்று உண்மையாகிவிட்டது. எத்தனை கல் வீச்சு நடந்தும், அவர் துணிச்சலுடன் அதை எதிர்த்து கூட்டத்தை நடத்திமுடித்தார்.

### அபாரஞாபகசக்தி

அண்மையில் அவரை நான் நல்லூரில் சந்தித்தபோது-இக் கல்வீச்சைப்பற்றி பிரஸ்தாபித்தபோது "நான் கல்லெறி வாங்காத கூட்டமே கிடையாது" என்று சிரித்தபடி கூறிஞர். 17 வருடத்தின் பின்னரும், கொடிகாமத்தில் நடந்த அந்தக்கூட்டத்தை ஞாபகத்தில் வைத்திருந்தார். அந்தக் கூட்டத்தில் குழப்பம் செய்த 'இராசு' பற்றியும் விசாரித்தார். அபாரஞாபகசக்தியுள்ளவர் அவர்.

1970ம் ஆண்டு தேர்தலின் போது அவரை பேட்டி காண்பதற்காக, கீரிமலையிலுள்ள அவரது இல்லத்திற்குச் சென்றிருந்தேன். நண்பகல் நேரம். அவரைச் சுற்றி இளம்தொண்டர்கள்இருந்துதேர்தல்வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். என்னைக்கண்டதும், அருகில் வருமாறு அழைத்தார். மற்றும் வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு ஒரு மணிநேரம் எனக்குப் பேட்டியளித்தார். அவரது அரசியல் வாழ்வில் பத்திரிகையாளருக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறியது கிடையாது. தாமாகவே பத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

---

## கலையுலகத் தொடர்புகள்—22

# ஒரு நல்ல நண்பனுக்கு உதாரணம்: ஜெய்சங்கர்!

**எஸ். பி. மயில்வாகனன்**

பலருக்கு ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்தது தெரியாமலிருக்கலாம், ஏனெனில் அவர் வந்து கலந்துகொண்ட விழாபதுளையில் நடைபெற்றது. அதனுல் அவர் கொழும்பில் என்வீட்டிலும் பதுளையில் என் உறவினர் வீட்டிலும் மட்டுமே இருநாள் தங்கி விட்டுத் திரும்பிவிட்டார். அவருடைய முதல் படமாகிய இரவும் பகலும் இலங்கையில் ஓடிமுடிந்திருந்தகாலம்.

இரவும் பகலும் வெற்றிக்குப்பின் பல படங்களில் ஒப்பந்தமாயிருந்தார்.

அச் சமயத்தில் பதுளையில் நடைபெறும் ஒருவிழாவில் கலந்து கொள்ள ஒருநடிகரை ஒழுங்கு செய்து தரும்படி என் உறவினர் வேண்டிக்கொண்டார். அதற்காக நான் ஒரு கடிதம் எழுதி ஏ. வி. எம். சரவணனுக்கு கொடுத்திருந்தேன். அலர் ஜெய்சங்கர் இப்ப நல்ல கிராக்கியோடு இருக்கிருர்' அவரை ஒழுங்கு செய்து விடுகிறேன். மற்றவர்கள் வருவதற்கு உடனே சம்மதிக்கமாட்டார்கள். 'ஜெய்சங்கர் இப்பொழுது எங்கள் படத்திலும் நடிக்கிருர். ஆகையால் அவர் நிச்சயம் வருவார்'' என்று கூறிஜெய்சங்கரை ஒழுங்கு செய்துவிட்டார். அதே சமயத்தில் மனோரமாவும்வர சம்மதித்திருந்தார். ஆனுல் அவருக்கு அவசரமாக பாஸ்போட் எடுக்க முடியாமல் போனதால் அவர் வரவில்லை, ஜெய்சங்கர் மட்டுமே வந்தார்.

ஜெய்சங்கரை இலங்கைக்கு அழைத்த என் உறவினர் நாளைக்கு ஜெய்சங்கர் இலங்கை வருக்கிருர் அவரை சந்தித்து பதுளைக்கு அழைத்து வாருங்கள் என்று எனக்குத் தகவல் கொடுத்துவிட்டு இருந்து விட்டார். ஏனெனில் அவருக்கு வேறுவேலை இருந்தது அந்த விழாவில் கலந்து கொள்ள திரு. மா. பொ. சிவஞானகிராமணியாரும் வருவதாக இருந்தது. அதனுல் அவரை பதுளைக்கு அழைத்து செல்வது அவர் பொறுப்பாகிவிட்டது.

என் உறவினர் குறிப்பிட்ட தினத்தில் ஜெய்சங்கர் கொழும்பிற்கு வந்தார். அப்பொழுது இந்திய விமானங்கள் இரத்மலானையில் வந்து இறங்குவது வழக்கம் ஆகையால் அவரை என் வீட்டிலிருந்து சென்று அழைத்துவருவது மிக சுலபமாகி விட்டது. விவேகானந்த ரோட்டில் இருந்த என் வீட்டில் தங்கிஞர். ஜெய்சங்கர் அந்தச் சமயம் என்னிடம்கார் இருக்க வில்லை. டாக்சியில் தான் எங்கும் கூட்டிச் செல்ல வேண்டியதாக இருந்தது.

### சிறந்த நண்பராக ஜெய்......

இந்தச் செலவைக் குறைக்க நினைத்து ஒரு பிரபல வியாபாரியின் ஸ்தாபனத்துற்கு ஜெய்சங்கரை அழைத்துச்சென்று அவரை அறிமுகம் செய்துவத்து அவரின் பல கார்களில் ஒன்றை தந்து உதவுமாறு கேட்டேன். ஆனுல் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி தட்டிக் கழித்துவிட்டார். ஆனுல் அதே முதலாளியை சில வருடங்களுக்கு முன் சந்தித்தபொழுது ஜெய்சங்கர் படங்கள் இலங்கையில பல வந்து ஓடிமுடிந்திருந்த காலம், ஜெய்சங்கர் மக்களின் அபிமான நடிகராகிவிட்ட காலம். அப்பொழுது நீங்கள் வந்து ஜெய்சங்கரை அழைத்துச் செல்ல கார் கேட்ட பொழுது நான் தரமறுத்தது உண்மை. இப்படி இவர் பிரபல்யம் அடைவார் என்று தெரிந்திருந்தால் நான் கார் தந்துதவியிருப்பேன். இப்பொழுது அவரின் உற்ற நண்பனுகவும் இருந்திருக்கலாம் என்று வருத்தப்பட்டார். ஏனெனில் ஜெய்சங்கர் ஒருவரேந்டுபழகி விட்டால் அவரை பிடித்து விட்டால் அவரை ஒருபோதும் மறக்கமாட்டார். சினிமா நடிகர்களுள் ஒரு சிறந்த நண்பராக விளங்குபவர் ஜெய்சங்கர். அதனுல்தான் அவர் பெயர் வெகுவிரைவில் பிரபல்யமாகி விட்டது; அது மட்டுமல்ல ஒரு பண்பட்ட நடிகராகியும் விட்டார்.

### வானெலிப்பேட்டி

அன்று முழுவதும் ஜெய்சங்கரை டாக்சியில் கூட்டித் திரிந்து பல இடங்களைக் காட்டினேன். இலங்கைவானெலிக்கு அழைத்துச் சென்று பேட்டியும் கண்டேன். நாங்கள் பேட்டி கண்டு முடிந்து வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் எனக்கு ஒரு டெல்போன் வந்தது. என்னுடன் பேசியவர் எங்கள் நிலையத்தில் ஜெய்சங்கரின் பேட்டியை ஒலிப்பதிவு செய்த என்ஜினியர். அவர் தவறுதலாக ஜெய்சங்கரின் பேட்டியில் கால்பகுதியை நல்ல வேளையாக கடைசிப்பகுதியை அழித்துவிட்டார். அன்று பிற்பகலே ஒலிபரப்பவேண்டிய நிகழ்ச்சி. இதை ஜெய்சங்கரிடம் சொன்னேன், கவலைப்படாதீங்க இப்பவே போய் திருப்பி ஒலிப்பதிவு செய்துவிட்டு வருவோம் என்ருர். சாப்பிட்டு முடிந்ததும் உடனேயே டாக்சியில் சென்று மீண்டும் அழிபட்ட பகுதியை ஒலிப்பதிவு செய்துவிட்டு வந்தோம். அன்று இரவு எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் வீட்டிற்கும் அழைத்துச் சென்றேன். அதன்பின் ஒரு சிங்களப்படத்தில் ஒரு பகுதியை ரெக்ஸ் தியேட்டரில் காண்பித்தேன். அடுத்த நாள் காலை நண்பர் அப்பாத்துரை என்பவர் தந்துதவிய காரில் பதுளைக்குப் புறப்பட்டோம். விடியற்காலை 8 மணியளவில் காலியை அடைந்துவிட்டோம் காலியை அடையும் சமயத்தில் காரில் ஏதோ சத்தம் ஏற்பட்டது. அது பெரிதாகி காருக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுவிட்டது. கார் அசைய மறுத்தது. காலிப் பஜார் பகுதிக்குப் போய் வாடகைக் காரை ஒழுங்கு செய்ய எத்தனித்தோம். ஆனுல் அவர்கள் கேட்ட கூலி அதிகமாக இருந்தது. இதனுல் காலி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அங்கு அப்பொழுது எஸ். பி யாக இருந்த திரு. இராமநாதன் அவர்களின் உதவியோடு ஒரு வாடகைக் காரை ஒழுங்கு செய்துகொண்டு நேராக கதிர்காமம் போனேம்.

### கதிர்காமத்தில்

கதிர்காமத்தில் அப்பொழுது திருவிழாக்காலம். அந்த ஜனக் கூட்டத்தில் சிலரே ஜெய்சங்கரை அடையாளம் கண்டு கொண்டார்கள். இதனுல் நாங்கள் எவ்வித சிரமமுமின்றி கதிர்காமத்தில் சுவாமிதரி

(8-ம் பக்கம் பார்க்க)



பின்னணிப் பாடகர்கள் சீர்காழி கோவிந்தராஜன், திருச்சி லோகநாதன் ஆகியவர்களுக்கு மத்தியில் கட்டுரை ஆசிரியர்.

### பரீட்சையில் சித்திபெற வேண்டுமா?

# ஞாபக சக்தியை எவ்வாறு விருத்தி செய்வது?

### வாசித்தல்-சில நுணுக்கங்கள்

1. வாசிக்கும்போது திறனாய்வுக் கண்ணோட்டத்துடனும், மதிப்பீட்டாற்றலுடனும் வாசிக்கவும் நூல் ஆசிரியர் யார்? அவரது தகைமைகள் என்ன? அவரது கருத்துக்களை ஏற்க முடியுமா?

2. முக்கியமான பகுதிகளுக்குக் கோடிடவும். மீட்டல் செய்யும் போது கோடிட்ட பகுதிகளை மட்டும் வாசிக்கவும்.

3. சில பகுதிகள் விளங்காவிடின், அப்பகுதிகளைத் தாண்டி அப்பாடத்தினைத் தொடர்ந்து வாசிக்கவும் அடுத்த அத்தியாயத்தினையும் தொடர்ந்து வாசிக்கவும். மீண்டும் முன்னர் விளங்காத பகுதிகளைத் திரும்பவும் வாசிக்கவும். தற்பொழுது அவ்விளங்காத பகுதிகள் மிக இலகுவில் விளங்கிவிடும்!

4. ஒரே விடயத்தைப் பற்றி எழுதப்பட்ட பல்வேறு புத்தகங்களை வாசிக்கவும், வினைக்களுக்கு விடையெழுதும் போது இப்புத்தக ஆசிரியர் இவ்வாறு கூறினர். அப்புத்தக ஆசிரியர் அவ்வாறு கூறுனர் என்று மேற்கோள்களுடன் விடைபகரவும். மேற்கோள்கள் காட்டப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் அதிகம்

### ஞாபக சக்தி பெருகிட...

ஞாபகசக்தி என்பது நுண்நயத்திறத்தினுலும், பயிற்சித்திறத்தினுலும் பண்படுத்தக்கூடியதோர் சக்தியே! ஏனைய சக்திகளைப்போன்றுஇஞ்ஞாபக சக்தியும் மனித முயற்சியினல் மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் முடியும், எவ்வாறு பல நாட்கள் தொடர்ந்து பல பயிற்சிகள் பெற்றமையினல் ஒருவன் உயரப்பாய்தல் போட்டியில் வெற்றிவாய்ப்புக்குரியசக்தியைஅடையமுடிந்ததோ, அவ்வாறே பல பயிற்சிகள் மூலம் ஒருவன் தனது ஞாபகசக்தியினை அதிகரிக்க முடியும்.

ஞாபகசக்தியினை இரு பெரும் கூறுகளாக வகுக்கின்றனர். கண்ணுல் காண்பவற்றினைச் (எழுதுதல், வாசித்தல், படம் முதலியனவற்றினைப் பார்த்தல்) சிலரினுல் நல்ல ஞாபகத்தில் வைத்துக்கொளளமுடியும். சிலரினுலோ, மற்ருேர் கூறுவதைமட்டுமே நல்ல ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். வேறு சிலருக்கோ இவ்விரு முறைகளும் சரிசம சக்தியைக் கொடுக்கக்கூடும். இக் கூறுகளில் நீங்கள் எக்கூற்றுக்குள் அமைகின்றீர்கள் என்பதை அனுபவரீதியில் உணர்ந்து, அச்சக்தியினை அதிகரிப்பதற்கு இதோ சில வழிகள்.

### 1. தோல்வி மனப்பான்மையினை கைவிடுக

சிலருடைய அபரிமிதமான ஞாபகசக்தியைக் கலனித்து. அவ்வாறன சக்திதன்னிடம் இல்லையே என்று சிலர் ஏங்கிடுவர். ஞாபசக்தி என்பது பல பயிற்சிகள் மூலமும் முயற்சிகள் மூலமும் அதிகரிக்க முடியுமென்ற உண்மையினை இவர்கள் முதலில் உணர்தல் வேண்டும். சிலரிடம்அபரிமிதமான ஞாபக சக்தி காணப்படுவதற்குக் காரணம் அவர்களது இடைவிடாத முயற்சியும் பயிற்சியுமே. ஆகவே நீங்களும் இடைவிடாத முயற்சியின் மூலமும் அபரிமிதமான ஞாபக சக்தியினை அடைந்திட முடியும். வேறு சிலரோ 'எனது ஞாபகசக்தி மந்தமாக இருக்கின்றதே', 'எனது ஞாபக சக்தி வரவரக் குறைந்து செல்கின்றதே' என்று ஏங்கிவிடுவர். இப்படியான எதிர்மறை எண்ணங்கள் மனதில் உதிக்கும் போதெல்லாம்; உங்களது மூளைக்கு 'எனது ஞாபகச்சக்தியினை மங்கச் செய்'. 'எனது ஞாபகசக்தியினை வளரவிடாதே' என்று கட்டளை இடுவதற்கு ஒப்பாகும். ஆகவே இவ்வகையான. எதிர்மறைக் கருத்துக்களை இன்றிலிருந்து தவிர்த்து, 'எனது ஞாபசக்தி அதிகரித்துவருகின்றது', 'பயிற்சியின் மூலம் எனது ஞாபக சக்தியினை அதிகரிப்பேன்' என்ற ஒளிமயக் கருத்துக்களையும் தன்னம்பிக்கை எண்ணங்களையும், வெற்றி மனமானமைப் பண்புகளையும் எண்ணியெண்ணி மனதில் வெற்றி மனப்பான்மையினை உதிக்கச் செய்திடுங்கள்?

## க. குகதாசன்

### 2. அகக்கண்ணினுல் நிகழ்ச்சிகளைக் காணவும்

ஏதாவதோர் செயலினை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவிரும்பினுல், அச் செயலை அகக்கண்ணினுல் கண்டு மனக்கண்முன் கொண்டுவருவது நல்லதோர் பயிற்சியாகும். உதாரமாக நாளை காலை வகுப்பிற்கு வரும் போது குறிப்பிட்டதோர் புத்தகத்தினை எடுத்துச்செல்ல வேண்டும் என எண்ணுகின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். நாளை காலை குறிப்பிட்ட புத்தகங்களை எடுப்பதுபோலவும், அதனை உங்களது பையில் வைப்பது போலவும், பஸ்வண்டியில் செல்லும் போது அப்புத்தகத்தினை எடுத்து வாசிப்பதுபோலவும் அகக்கண்ணுல் கண்டு களித்து மனக்கண்முன் அந் நிகழ்ச்சியைக் கொண்டுவந்தால் அக்கருமத்தினை நீங்கள் கட்டாயம் ஞாபகத்தில் வைத்திருப்பீர்கள். வேறு சிலரோ. கருமம் ஒன்றினை ஆற்றிய பின்பு. அக் கருமம் ஆற்றப்பட்டதா! என்ற ஐயம் தோன்றியவண்ணம் காட்சிதருவார்கள். உதாரணமாகச் சிலர் அலுவலகத்திலிருந்து வீட்டிற்குச் சென்றதும் அலுவலக இரும்புப் பெட்டியைப் பூட்டினேனு இல்லையா? என்ற ஐயுறவுடன் அங்கலாய்ப்பார்கள். இப்படிப் பட்டோர் இரும்புப் பெட்டியைப் பூட்டும்போது "இதோ நான் இரும்புப் பெட்டியைப் பூட்டுகின்றேன்", "இதோ இரும்புப்பெட்டி பூட்டப்பட்டு விட்டது" என்று மனதிற்குள் கூறியவாறு அக்கருமத்தினை ஆற்றினுல், அக்கருமமும் மனதில் நன்ருகப் பதிந்துவிடும். இப்படிப்பட்ட பயிற்சிகள் மூலம் சமூக வாழ்விற்கும் அவசியமான ஞாபகசக்தியினையும் கல்விவளர்ச்சிக்கு அவசியமான ஞாபகசக்தியினையும் பெருக்கிடலாம்.

### 3. ஒருமுகச் சிந்தனை

கொண்ட கருமத்தில் கூர் நோக்குக் கவனம் செலுத்துவதாலும், ஒருமித்த கவனத்தை அக்கருமம்மேல் கொள்வதாலும், அக்கருமம் சம்பந்தமான விடயங்களை நன்ருக ஞாபகம் வைத்துக்கொள்ள முடியும்.

### 4. ஆர்வம்

ஆர்வம்பூண்டதோர் விடயத்தினை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மிகவும் இலகுவானது. கணித வாய்ப்பாடுகளை மனனம் செய்வதற்குத் தவிர்க்கும் மாணவன் இலங்கை, இந்தியா, இங்கிலாந்து கிரிக்கட் விளையாட்டு வீரர்களின் பெயர்களையும் அவர்கள் எடுத்துக்குவித்த ஓட்டங்களையும் வரிசைக்கிரமப்படி சொல்லும் வல்லமை உடையவனுக விருத்தல் கூடும். விளையாட்டுத் துறையில் அவனுக்கு இருக்கும் அதிக ஈடுபாடே இதற்குக் காரணமாகும். இவ் அதிக ஈடுபாடு காரணமாக அவன் கிரிக்கட் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளைப் பல்வேறு கோணத்தில் காணுகின்ருன். கிரிக்கட் சம்பந்தமான செய்திகளை அவன் புதினத்தாள்களில் வாசிக்கின்ருன். வானொலியில் கிரிக்கட் சம்பந்தமான நேர்முக வர்ணனைகளைக் கேட்கின்ருன். நண்பர்களைக் கண்டதும் அவர்களுடன் கிரிக்கட் போட்டிகள் பற்றி அளவளாவுகின்ருன். இப்படி ஓர் விடயத்தினை பல்வேறு கோணங்களில் பல்வேறு வடிவில் காணும்போது அவ்விடயத்தில் அபரிதமான ஞாபகசக்தி இருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆகவே, எவ்விடயத்தில் உங்களுக்கு அதிக ஆர்வமுண்டோ அவ்விடயத்திலேயே உங்களுக்கு அதிக ஞாபகசக்தி தோன்ற ஏதுவாகும்.

# கணபதி வணக்கம்

1. பாலகணபதி:- நான்கு திருக்கரங்களும், யானைமுகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனி உடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.

2. தருணகணபதி:- எட்டுடுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின்துண்டு இவைகளையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்றநல்ல சிவந்ததிருமேனி படைத்தவர்.

3. பக்திகணபதி:- சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக தேங்காய், மாம்பழம், வாழைப்பழம்; பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.

4. வீரகணபதி:- வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினறையும் தாங்கிய பதினறு திருக்கரங்களையும் சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

5. சக்திகணபதி:- செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு விருப்பவர். ஒருவருக்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை, இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

6. துவிஜகணபதி:-நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம், இவற்றைத் தரித்தவர். மின்னற்கொடி போல விளங்குகின்ற கைவளையங்களை உடையவர். சந்திரன்போல வெண்மையானவர். நான்கு யானை முகங்களை உடையவர்.

7. சித்திகணபதி:- மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.

8. உச்சிஷ்ட கணபதி:- நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும் நீல நிறத்திருமேனி உடையவருமாக விளங்குபவர்.

வேறுவகை: பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காமமோகிதராக விளங்குபவர்; நீலவர்ணம் உடையவர்.

9. விக்னகணபதி:- சங்கு கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றேடு கூடிய திருக்கரங்களையுடையவரும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவரும் பொன்மேனியருமாக விளங்குபவர்.

10. க்ஷிப்ரகணபதி:- தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகுப்பம், அங்குசம், இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப்போன்ற அழகியமேனியர் செந்நிறமானவர்.

11. ஏரம்ப கணபதி:- அபயம் வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமைகலந்த கருமை நிறம் உடையவர்.

12. லட்சுமிகணபதி:- எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம் பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம், இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத்தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

மஹாகணபதி:- மாதுளம் பழம், கதை, கரும்பு, வில். சக்கரம், தாமரை, பாசம். நீலோத்பலம், நெற்கதிர், தந்தம்,

(9ம் பக்கம் பார்க்க)

தொகுத்தவர்;

## "முருகு"

### தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—13

# பெண்களின் உயர்வுக்காக எழுதினர்!

தமிழ் நாட்டுப் பெண்கள் பல துறைகளிலும் முன்னேற வேண்டுமென விரும்பி அதற்காகப் பாடுபட்டு உழைத்தவர் வேதநாயகர். நல்ல எண்ணங்கள் நங்கையர் மனதிலே பதிதல்வேண்டும் என்பது அவரது கொள்கை. பெண்ணுக்குக் கூறும் அறிவுரைகளை ஆக்கி "பெண்மதி மாலை" என்ற பெரோடு அவற்றை வெளியிட்டார். பிறந்த மனையிலும் புகுந்த மனையிலும் பெண்கள் சோம்பலின்றி வேலையிலீடுபட வேண்டுமென்றும் வாழ்க்கைப் பட்ட பெண்ணே வீட்டுக்கு அதிபதி என்றும் அவர்கள் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டுமென்றும் எடுத்துக் கூறுவது பெண்மதிமாலை.

"மதியிது மதியிது
பெண்ணே-புண்ய
வதியல்லவோ நல்ல மகராஜி
கண்ணே
வேலைக்கு நீ சிணுங்காதே-
ஒரு
மூலைக்குள் புகுந்து நீ முணு
முணுக்காதே
வீட்டுக்கதிபதி நீயே-வெளி
நாட்டுக்கதிபதியுன் நாயகன்
சேயே
புண்ணியம் செய்யலாம்
நாளை-என
எண்ணியிராதே இது நல்ல
வேளை-மதி"

தமிழ்நாட்டில் பெண்கல்விக்காக முன்னின்று உழைத்தவர் வேதநாயகர். பெண்கள் மரியாதையாயும் அன்பாயும் நடத்தப்பட வேண்டுமென வாதாடி பெண்ணுலகுக்குள் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் வேதநாயகர்.

பாடல்களைவிட அநேக வசன நூல்களையும் இவர் ஆக்கினர். அவற்றுள் தலைசிறந்தது "பிரதாப முதலியார் சரித்திரம்" என்ற கற்பனைக் கதையாகும். இதுவே தமிழில் எழுந்த 'முதல்நாவல்' ஆகும். இந்நூல் நகைச்சுவை நிரம்பியது. படிப்போர்மனதைக்கவரக்கூடியது மூடப்பழக்கவழக்கங்களைக் கண்டிப்பது. நல்ல பழக்கங்கள் பரவ வழிகாட்டுவது. இந் நாவல் ஆங்கிலத்திலும்மொழிபெயர்க்கப்பட்டது. பதினைந்து ஆண்டுகள் நீதிபதியாகக் கடமையாற்றியபின்னர் இவர் இளைப்பாறினர். இளைப்பாறிய காலத்தில், முற்றுகவே தமிழுக்குத் தொண்டுசெய்யும் கடமையில் ஈடுபட்டார். "ஞான சுந்தரி" என்னும் அழகிய நாவலை ஆக்கியவரும் இவரே. கிறிஸ்தவ விசுவாச சத்தியங்கள் பலவற்றை அழகிய கீர்த்தனைகளாகப் பாடி, "சத்தியவேத கீர்த்தனை" என்

(9-ம் பக்கம் பார்க்க)

## வண. எம். ஏ. இரத்தினராஜா

# இரட்டை ஆற்றல் கைவந்தவர் பேராசிரியர் கல்கி!

மீ. ப. சோமசுந்தரம்

1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி தான் பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழுலகை வெறிச்சோட விட்டு இவ்வுலகிலிருந்து மறைந்தார்.

தேசபக்தரும் காந்தீய வாதியுமான கல்கி அவர்கள் அரசியலும் இலக்கியமும் இரண்டும் இணைந்து கலந்த எழுத்தாளராக விளங்கினார். 9-9-1399-ல் தஞ்சாவூர் மாவட்டம், புத்தமங்கலம் என்ற சிற்றூரில் ஒரு கிராமக் கர்ணத்துக்கு மகனாகப் பிறந்து தமது எழுத்தாற்றல் ஒன்றினாலேயே மிகப் பெரிய உன்னத நிலைகளை அடைந்தார். அந்த எழுத்தாற்றல் பல ஸ்தாயிகளில் சஞ்சரித்த போதிலும் அவருடைய வாழ்க்கைப் பாடலின் ஆதார சுருதி தேசியமும் காந்தீயமுமே யாகும். 1921-ல் திருச்சி தேசியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போதே காந்தீய ஒத்துழையாமை இயக்கத்தில் ஈர்க்கப்பட்டுக் கரூரிலே சிறை செய்யப்பட்டார். பிற்கால வாழ்விலும் மேலும் இரண்டு முறைகள் சிறைபுகுந்தார்.

பத்திரிகை எழுத்தாளராக அவர் முதன் முதல் சேர்ந்தது திரு. வி. க. அவர்களின் நவசக்தியிலேதான் பிறகு மதுவிலக்குப் பிரசாரத்துக்கென்றே ராஜாஜி நடத்தி வந்த 'விமோசனம்' என்னும் பத்திரிகையில் சேர்ந்து ராஜாஜியிடமே பயிற்சி பெறும் பேறு அவருக்குக் கிட்டியது. இந்த இரண்டு பத்திரிகைகளிலும் தாம் பெற்ற பயிற்சியின் நினைவுகளை அவர் எப்போதும் நன்றி உணர்ச்சியோடு போற்றிவந்தார்.

## ஆனந்தவிகடனில்

சில ஆண்டுகளுக்குப் பிறகு வாசன் அவர்கள் நடத்திய ஆனந்த விகடனில் சேர்ந்து தமது சலியாத ஊக்கத்தாலும், ஏராளமான எழுத்தாலும் அந்தப்பத்திரிகையை இந்தியாவிலேயே மிகுந்த வாசகர்களைக்கொண்ட வார இதழ்களில் ஒன்றாக வளர்த்துவிட்டார். அவருடைய தலையங்கங்களை மக்கள் வேட்கையோடு படித்தார்கள். ஏனென்றால் அவர் எந்த அரசியல் சிக்கல்களையும் தகைமையோடும் தெளிவோடும் ஆராய்ந்து அம்பு பாய்வதுபோல் நெஞ்சுக்குள் செல்கிற நேரான தமிழ்நடையில் எழுதினார். அந்தப் பத்திரிகை அத்தனை ஆதரவு பெற்றதற்கு முக்கிய காரணம் கல்கியின் நகைச்சுவையே! எல்லாருக்கும் வியப்பூட்டிய ஒரு விஷயம் என்னவென்றால், எத்தனை பயங்கரமான அரசியல் தத்துவங்களையும் புன்முறுவலோடு அணுகி, அகில உலகச் சமுதாயப் பொருளாதாரச் சிக்கல்களையெல்லாம் எளிமையோடும் அழகோடும் விளங்கினார் கல்கி அவர்கள்! அதோடு நிற்கவில்லை அவர் தொண்டு. அவருடைய எழுதுகோலானது சாதிப்பூசல்களையும் பிரிவினைச் சக்திகளையும் எதிர்த்துப் போராடி, பாரத ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் அரண்செய்தது; நமது விடுதலைப் போரில் இவ்வாறு அவர் செய்த சேவையானது, ஆற்றல் மிகுந்த பேராசிரியர் ஒருவர் தமது எழுத்தின் மூலம் பொதுமக்களுடைய கருத்துக்களை உருவாக்குவதிலும் நாட்டு நடவடிக்கைகளில் சாமானிய மக்களும் பங்கு கொள்ளும்படி செய்வதிலும் எத்தகைய அரிய சாதனைகளைப் புரியமுடியும் என்பதை எடுத்துக்காட்டியது. இந்த அரிய சேவையில் கல்கி தமது அரசியல் குருவான ராஜாஜியின் வழியில் நின்று தொண்டாற்றினார். கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் ரசிகமணி டி. கே. சி.யின் கொள்கைகளை உறுதியோடு கடைப் பிடித்தார்.

## பல்கலை ஆற்றல்

கல்கியின் பெருமை அவருடைய பல்கலை ஆற்றலாகும். சிறுகதை, நாவல், விமரிசனம், நகைச்சுவைக்கட்டுரை, கவிதை, அரசியல் எழுத்து. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற எழுத்துப் பொறுப்பு ஆகிய அத்தனை வகையிலும் அவர் தமது திறமையை நிலைநாட்டினார். அவருடைய காலத்தில் அவர் பங்குகொள்ளாத, பங்குகொண்டு வேகம் பெறாத எந்த அரசியல் அல்லது சமுதாயப் போராட்டமும் இருந்ததில்லை. எட்டையபுரம் பாரதி மண்டபம், கிண்டி காந்தி மண்டபம் போன்ற பல நினைவாலயங்களை நிறுவுவதற்கு அவர் பொறுப்பாகஇருந்தார். அதோடு பல இலக்கிய ஆசிரியர்களுக்கும், தியாகிகளுக்கும் நிதி திரட்டிக் கொடுத்திருக்கிறார். எத்தனையோ எழுத்தாளர்களையும் கலைஞர்களையும் கண்டு பிடித்து ஊக்கமூட்டிப் பிரபலப்படுத்தியிருக்கிறார். எல்லாம் அவருடைய எழுதுகோலின் ஆற்றல்! 1941 இல் ஆனந்தவிகடனைப் பிரிந்து தமது தோழர் சதாசிவத்தின் ஒத்துழைப்புடன் சொந்தப் பத்திரிகை தொடங்கியபோது அவருடைய புனைபெயர் வீடு மனைகளில் எல்லாம் வழங்கிய ஒரு குடும்பப்பெயராகவே விளங்கியதால், சில மாதங்களிலேயே அந்தப் பத்திரிகை ஒரு பெரியசக்தியாக வளர்ந்து துலங்கியது. இத்தனை பெரிய இமாலய சாதனைகளைக் கல்கி புரிய முடிந்ததற்குக் காரணம், அவர் ஒரு எழுத்தாளர் என்பது மட்டும் அல்ல, அவர் ஒரு பத்திரிகைக் குறிப்பாளராகவும் இருந்ததுதான். ஒரு பத்திரிகை ஆசிரியரின் வெற்றிக்கு அந்த ஆசிரியரின் கற்பனை எழுத்துக்களோடு கூட அவர் மற்றத்துறைகளில் தக்க குறிப்புகள் எழுதும் ஆற்றல் உடையவராகவும் இருக்கவேண்டும் அல்லவா? கல்கியிலும் இரட்டை ஆற்றல் வளமாக இருந்தது. எனவே அவர் எதை எழுதினாலும் வெளியிட்டாலும் மக்களிடம் அது எடுபட்டது.

கல்கிக்குத் தமிழ்மொழி மீதும் தமிழர் கலைகளின்மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த ஈடுபாட்டை அப்படியே வாசகர்கள் உள்ளத்திலும் உண்டாக்கிவிடுவார். தமிழுக்கோ தமிழ்க் கலைகளுக்கோ ஏதேனும் இழுக்கு ஏற்பட்ட போதெல்லாம் தமது பேனா முனையிலே வீரத்தோடு போர் தொடுத்தார். எனினும் அவர் குறுகியமனப்பான்மை கொண்டவர் அல்ல. தமிழ் இசையின் மறுமலர்ச்சியிலும், தமிழ் பாடமொழியாக இடம்பெறுவதிலும், இதுபோன்ற பிற கிளர்ச்சிகளிலும் அவர் முழு மூச்சோடு போரிட்டபோதிலும், தமது மொழிப்பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் தம்முடைய பாரததேசப்பற்றை அந்த ஐக்கிய சிந்தனையை அழிக்கும்படி அவர் விட்டதில்லை. தேசிய ஒருமைப்பாடும் காந்தீயபக்தியுமே அவர் எழுத்துக்கள் அனைத்திலும் பிரதிபலித்தன. விடுதலை வீரர்களை நாயகர்களாகக் கொண்ட சிறுகதைகள்தவிர அத்தகைய தேசீய நெடுங்கதைகளும் அவர் எழுதி வழங்கினார். ''தியாக பூமி'' பலரும் விரும்பிப்படித்த அத்தகு நாவல்களில் ஒன்று. இது திரைப்படமாகவும் ஓடியது. இது போலவே தான் சாகித்திய அகாதமியின் விருதுபெற்ற அவருடைய ''அலை ஓசை'' என்ற நவீனமும், விடுதலைப் போரின் வீரநிகழ்ச்சிகள், இந்தக் கதைக்கு விறுவிறுப்புத் தந்து, காந்தீய சித்தாந்தம் கதையின் ஆழத்திலே சுழித்து ஓடுகிறது. இவைதவிர மகாத்மாவின் வரலாறும், சத்திய சோதனை மொழிபெயர்ப்பும் அவர் எழுதியுள்ள தேசீய நூல்களில் முக்கியமானவை.

## எளிமையான தமிழ் நடை

கல்கியின் தனிப்பண்பு அவருடைய இனிய எளிய தமிழ் நடை. பழமையான கரடு முரடுச் சொற்களை நீக்கினார். அதே சமயம் புதுமை என்ற பெயரில் வெளிநாட்டு வாடை வீசுகிற மயக்க நடையையும் புறக்கணித்தார். அவருடைய கையிலே பேச்சுத் தமிழானது இலக்கிய வல்லமை பெற்று ஆழமும் விசாலமும், ஒலியும் ஓட்டமும், ஒளியும் நிழலும் பெற்றுத் திகழ்ந்தது. அவர் தமது மனக்கண்ணுக்கு முன்னால் சாமானிய வாசக நேயரையே நிறுத்திக்கொண்டு எழுதினார். எனவே எல்லாருக்கும் புரியும்படி எழுதவேண்டும் என்பது அவருடைய அடிப்படை நோக்கம். கற்பனைத்திறம் மிகுந்த கலைஞராக அவர் இருந்த காரணத்தினால், பேச்சுத்தமிழ் அவர் எழுதுகோலிலே கலைத்தமிழாகவும் மிளிர்ந்து பண்டிதரையும், பாமரரையும் கவர்ந்தது.

கல்கியின் சாதனைகளை இன்று எண்ணிப்பார்த்தால் வியப்பு மேலிடுகிறது. ஒவ்வொரு கோணத்திலும் ஒரொரு வர்ணக்கோலத்தைக் காட்டுகிற ஓவியக் கண்ணாடியைப்போல பல்துறைக் கலைஞராக அவர்விளங்கினார். பீரங்கி நெருப்பைக் கக்கும் அரசியல் தலையங்கங்கள். இளம் எழுத்தாளருக்கும் கலைஞருக்கும் தெம்பு ஊட்டுகிற வைடமின் மதிப்புரைகள், மேனி அலுங்காமல் வானவெளியிலே நம்மை அழைத்துச் செல்லும் பிரயாணக்கட்டுரைகள், ஆடல் பாடல் குறிப்புகளிலிருந்து கச்சேரியை நேரிலே கேட்பது போல் அனுபவம் தருகிற விமர்சனங்கள் புகைப்படம் பிடித்தாற் போல நம் கண்முன் சொற்படமாகச் சுழலும் விழா வர்ணனைகள் என்று அவர் எல்லாத் துறைகளிலும் ஒளிவீசிப் பிரகாசித்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)

நூல் விமர்சனம்:

# உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய வைர விழா

தல புராணங்களைக் கொண்டு எப்படித் தலங்களைப் பற்றி அறியமுடியுமோ, அதுபோல் கல்லூரிகளும், வித்தியாலயங்களும் வெளியிடும் மலர்கள்மூலம் அவற்றின் சரித்திரம் முதலியவற்றை அறிய முடிகிறது.

சமீபத்தில் தனது வைர விழாவைக் கொண்டாடிய உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஓர் அழகிய மலரை வெளியிட்டுள்ளது. அதன் மூலம் அதைப்பற்றிய விபரங்களை அறியமுடிகிறது. இவ் வித்தியாலயம் 1915ம் ஆண்டு உரும்பராய் இந்துக்கல்லூரி காணியில் தாபிக்கப்பட்டது. 1945ம் ஆண்டு இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்ததும் இந்துக் கல்லூரி வளர்ச்சியடையவே, இவ் வித்தியாலயம் வேறிடத்துக்கு மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இலவசக் கல்லூரி வந்ததும், யாழ்ப்பாணக் கிராமங்களிலிருந்த உரும்பராய் சைவாங்கிலப் பாடசாலை போன்ற பாடசாலைகள் பெற்றோர், ஆசிரியர், பழையமாணவர் போன்றோரின் தீவிர முயற்சியினால் விஞ்ஞான கூடம் போன்ற சகல வசதிகளையுங் கொண்ட கல்லூரிகளாக மாறின. கிராமங்களிலுள்ள சில கல்லூரிகள் யாழ்ப்பாண நகரத்திலுள்ள கல்லூரிகளுடன் போட்டியிடக்கூடிய நிலைக்கு வளர்ச்சியடைந்தன. இதனாலேயே யாழ்ப்பாணத்திலிருந்து பெருந்தொகையான மாணவர்கள் சர்வகலாசாலையில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் போன்ற பகுதிகளில் சேரமுடிந்தது. யாழ்ப்பாணத்தார் கால் நூற்றாண்டுக்குமுன் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர்செய்த தொண்டையே இப்பொழுது இவ்வரசாங்கம் இலங்கையின் கிராமங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செய்துவருகிறது. இதனையே கல்வி மந்திரியாரும், கல்விப் பகுதிச்செயலாளர் போன்றோரும் இம்மலருக்கு அனுப்பிய செய்திகளில் குறிப்பிட்டுள்ளார்கள்,

வேறிடத்துக்கு மாற்றப்பட்ட சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவர் அக்காலத்தில் அவ்வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. ஆ. கந்தையா அவர்கள். அவர்களை நான் நன்கறிவேன். இவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தைத் தாபித்த நாகமுத்து, இடைக்காடு சைவாங்கில வித்தியாசாலை, சைவவித்தியா விருத்திச் சங்கம் முதலியவற்றின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய ஆசிரியர் வேலுப்பிள்ளை ஆகியோரின் நெருங்கிய உறவினர். திரு. கந்தையாவைத் தொடர்ந்து தலைமையாசிரியர்களாக விருந்த திருவாளர்கள் பொன்னுத்துரை, குமாரசேகரம், சபாரத்தினம், கதிரவேல் முதலியோரும் இவ் வித்தியாலய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியுள்ளார்கள். இப்பொழுது அதிபராயிருக்கும், திரு. வி. அரியநாயகம் அவர்களது சேவையும் பாராட்டக் கூடியவகையில் அமைந்துள்ளது. இவ்வித்தியாலயத்தில் மேல் வகுப்புக்கள் வைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெறுவதற்கு அயராது உழைத்தவர் இப்பொழுது இவ்வித்தியாலயத்துக்கு உப அதிபராயிருக்கும் திரு. அ. பஞ்சாட்சரம் ஆவர். மேற்கூறப்பட்டவர்களின் சேவையினாலேயே இவ் வித்தியாலயம் சகல வசதிகளையும் கொண்ட ஒரு சிறந்த வித்தியாலயமாகத் திகழ்கிறது. இவ்விபரங்களையெல்லாம் முன்னாள் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக விருந்த பெரியார் திரு. அ. இளையதம்பி அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்தும் வித்தியாலய அறிக்கையிலிருந்தும் பெற்றோர் ஆசிரியர் சங்க வரலாற்றிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

வித்தியாலயம் சம்பந்தமான கட்டுரைகளோடு சமயம், கல்வி, தமிழ், இலக்கியம், நுண்கலைகள் பற்றிய கட்டுரைகள் இம்மலருக்கு நறுமணம் ஊட்டுகின்றன. அத்துவிதம் பற்றி தமக்கே உரிய பாணியில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இசைத்தமிழ் வளர்ச்சிக்கு நாட்டார் பாடல்களின் பங்கு பற்றி கலாநிதி க. கைலாசபதி ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார். சங்க காலந்தொடங்கி இக்காலம் வரை நாட்டார் பாடல்கள் தமிழிசைக்கு ஆற்றிய தொண்டை நுணுக்கமாய் ஆராய்ந்துள்ளார். இசைத்தமிழுக்கு பாவலர் துரையப்பாபிள்ளை ஆற்றிய தொண்டைக் குறிப்பிடும் போது யோகசுவாமிகள் தொண்டையும் குறிப்பிட்டிருக்கலாம். யோகசுவாமிகள் பல கீர்த்தனங்களையும், சித்தர் பாடல்களின் போக்கையொட்டிப் பல பாடல்களையும் இயற்றியுள்ளார்.

சமயக்கல்வி பற்றி திரு. கி. லக்ஷ்மண ஐயர் அவர்களும் கலாநிதி கைலாசநாதக்குருக்களும் எழுதியுள்ளார்கள். திரு. லக்ஷ்மண ஐயர் இலங்கையில், உலகத்தில் வேறெங்கும் காணப்படாத முறையில் சமயம் கட்டாயமாகப் போதிக்கப்படுவதைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சமயக் கல்வியையும் திறம்படப் போதிப்பதற்கு கருத்தரங்குகள் முதலியவற்றை நடாத்துவதையும் குறிப்பிட்டுள்ளார். இவை இப்படியிருந்தபோதிலும் கட்டாயச் சமயக்கல்வியினால் நாடு போதிய பயனடைந்திருக்கிறதா என்னும் கேள்வியெழுகின்றது!

நூறாண்டுகளுக்கு மேல் சைவசமயக் கல்விக்கு உறுதுணையாயிருந்த நாவலரின் சைவ வினாவிடைகள், இப்பொழுது பாடசாலைகளில் போதிக்கப்படாதிருத்தல் ஒரு பெருங்குறையாகும்.

பேராசிரியர் வித்தியானந்தன், நாவலர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி விபுலானந்தர் இந்தியாவிலும் இலங்கையிலும் ஆற்றிய தொண்டை விவரித்துள்ளார். கலாநிதி சிவத்தம்பி இலக்கிய விமரிசனத் துறையில் முன்னோடிகளாக விளங்கிய பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன் முதலியோரின் தொண்டை விளக்கியுள்ளார். இம்மலரில் பலரின் கவிதைகளைப் படித்து இன்புறலாம்.

மேற்கூறியவற்றிலிருந்து உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய வைரவிழா மலரின் சிறப்பை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். அதனை வெளியிட்ட மலர்க்குழுவுக்கு எமது பாராட்டு உரியதாகுக.

—ச. அம்பிகைபாகன்

(முன்னாள் அதிபர், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்)

### தந்தை செல்வநாயகம்

# விசுவாசக்கண்ணால் தமிழரின் விடுதலைக் காட்சியைக் கண்டவர்!

**[அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இறுதிச்சமயச்சடங்குகள் தெல்லிப்பழையிலுள்ள தென் இந்திய திருச்சபை தேவாலயத்தில் நடைபெற்ற சமயம் யாழ். அத்தியட்சகர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் நிகழ்த்திய அஞ்சலி பிரசங்கம் இது- திருமலையைச் சேர்ந்த திரு. ச. பெ. வரதராசன் இதனைத் தொகுத்துத் தருகின்றார்.**

## அதி. வந். டி. ஜே. அம்பலவாணர்

(1) ''கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?

(2) உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகின்றவன் தானே.

(3) அவன் தன் நாவினால் புறங் கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கின்றான்

(4) ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்; கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகின்றான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறுதிருக்கின்றான்.

(5) தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கின்றான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை. (பரிசுத்த வேதாகமம் 15ம் சங்கீதம்)

15ம் சங்கீதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கும் நீதிமானைப் போன்ற ஒருவரான திரு. செல்வநாயகம் அவர்களின் சீவியத்திற்கும், அவரின் மக்கள் பணிக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் இங்கு கூடியிருக்கின்றோம். அவர் இலங்கைத் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய இடத்திற்குரியவர் மாத்திரமன்று, அவ்வரலாற்றின் ஒரு புதிய அதிகாரப் பொருளாகவும், அவ்வரலாற்றுக்கே ஒரு புதிய திசையைக் கொடுத்தவராகவும் விளங்குகிறார். நமது வரலாற்றில் இப்பெரிய பங்கை எடுத்ததன் நிமித்தமே அவரை மக்கள், பெரியார் என்றும், தந்தை என்றும், ஈழத்துக் காந்தி என்றும், அமரர் என்றும் அழைக்கத் தொடங்கினார்கள். இப்படியான ஒருவரின் சேவையும், பண்பும் பணியும் நிறைந்த நற்பணிகளும் முடிவடைந்த இவ்வேளையில், சங்கீதகாரன் கூறியது போல் அவர் கடவுளின் கூடாரத்தில் தங்கவும், அவருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணவும் சென்றிருக்கின்றார் என்று நாம் திடமாய் நம்புவோம்.

அரசியல் துறைக்குழ் மார்க்கத்திற்கும் தொடர்பென்ன? அரசியலில் ஈடுபடுவோர் மார்க்க நெறியைக் காக்கமுடியுமா என்று பலர் கேட்பார்கள். அரசியல்துறை அழுக்கு நிறைந்தது. போட்டிகள், பகைகள், கட்சி மோதல்கள், கொள்கை வேறுபாடுகள், சதிகள், சதி ஆலோசனைகள் நிரம்பியது. இத்துறைக்குள் தெய்வ பக்தர்கள் பிரவேசிக்கமுடியுமா என்று பலர் கேள்வி எழுப்புவதுண்டு. திரு. செல்வநாயகம் அவர்கள் அரசியல் துறைக்குள் பிரவேசித்துக் கறைபடாமல் தன்னைத் தூய்மையாகக் காத்தது மாத்திரமன்று, அரசியலையே ஒரு மதிப்புக்கும் மேன்மைக்கும் உகந்த துறையாக உயர்த்தினார். நேர்மை, உண்மை, நீதி, நியாயம் ஆகிய இலட்சியங்களை அரசியலோடு அமையச்செய்த சிறப்பு அவருக்கு உண்டு. டாக் கமர் சோல்ட் என்ற காலஞ்சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் கூறியது, ''எங்கள் காலத்தில் பரிசுத்தத்தையடையும்பாதைசெயல் முறைக்கூடாகவே செல்கின்றது.'' இவ்வுண்மை திரு. செல்வநாயகம் அவர்களின் அரசியல் பணியில் நிரூபிக்கப்பட்டதை நாம் காணக்கூடியதாயிருந்தது. அவர் அரசியலையும் மதக் கோட்பாடுகளையும் சமூகப் பணியையும் மார்க்கத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும்பொழுது அவர் ''அரசியல் வாதிகளுக்குள் ஒரு பக்தன் என்றும்' பக்தர்களுக்குள் ஒரு அரசியல்வாதியென்றும் நாம் சொல்லத் துணியக்கூடும்.''

திரு. செல்வநாயகத்தின் அரசியல் பணியையும், தமிழ் மக்ளுக்கு ஆற்றிய தொண்டையும் அவரின் அடிப்படையான விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனுமே இணைத்துப் புரிந்துகொள்ளலாம். தன் மக்களின் கதியை உணர்ந்ததன் மூலமே அரசியலுக்குள் குதிக்க ஏவப்பட்டார். இஸ்ரவேலருடைய தலைவர் மோசே, தன் மக்கள் எகிப்தில் அடிமைகளாயிருப்பதைப் பார்க்கமுடியாமல் அவர்களை விடுதலை பண்ணப் புறப்பட்டதுபோல, திரு. செல்வநாயகம் அவர்களும் இந்நாட்டின் தமிழ்மக்கள் கதியைக் கவனித்து, அவர்களின் புலம்பலைக் கேட்டு அவர்களின் விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தார். மோசே தொடக்கம், தீர்க்கதரிசிகளுக்கூடாக நமது ஆண்டவர் இயேசு வரைக்கும் வேதாகமத்தில் நாம் கவனிப்பது என்னவெனில், இருக்கும் நிலையை அமைவடக்கமாகப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதல்ல, உள்ள நிலையை மாற்றியமைப்பதே எங்கள் கடமை என்பது. கார்ல் மாக்ஸ் இந்த அடிப்படையான வேதாகம உண்மையைப் பற்றிப் பிடித்துக் கூறினார்.

''தத்துவ ஞானிகள் உலகத்தை விளங்கிக் கொள்ளவே முயற்சித்தார்கள் எங்கள் கடமையோ அதை மாற்றியமைப்பது'' இப்படியான ஒரு விசுவாசத்தினால் தான் ஏவப்பட்டு செல்வநாயகம் அவர்கள் தமிழ் மக்ளின் உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் உழைக்கவும் அவர்களின் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட நிலையை மாற்றவும் புறப்பட்டார். மேல் நாட்டு தத்துவ ஞானி ஒருவர் சரித்திரம் அல்லது வரலாறு என்பது மனிதனின் விடுதலைப் போராட்டத்தின் கதையே என்றார். திரு. செல்வநாயகம் அவர்களும், இந்நாட்டின் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து அதை அநுகூலமாக முடிப்பதன்மூலமே தமிழர் வரலாற்றுக்கும் கருத்தோ பொருளோ இருக்கும் என்று நம்பினார். இதில் இறங்கிய பின் தடைகள் அவரைப் பின்வாங்கச் செய்யவில்லை. தாமதம் அவரைச் சோர்வடைய விடவுமில்லை. 1958-ம் ஆண்டு குழப்பங்கள் நடந்தபொழுது என்உடன் ஊழியன் ஒருவர் திரு. செல்வநாயகத்தைப் பார்த்து, இனித் தமிழராகிய நமது வருங்காலக் கதியென்னஎன்று கேட்டபொழுது அவர் ''விசுவாசக்கண்ணால் காண்கிறோம்'' என்று கிறிஸ்தவ பாட்டின் வரியொன்றை மறுமொழியாகக் கூறினார். அவருடைய விசுவாசம் ஓர் தீர்க்கமான காட்சியினால் தூண்டப்பட்டு, அக்காட்சியை நிறைவேற்றும் பாதையில் அவரை நெருக்கி ஏவியது. மோசேயைப் போலவே அவரும் வாக்களித்த நாட்டை அடையாமல் இவ்வுயிர் நீங்க நேரிட்டது. எனினும் அவர் கண்டகாட்சி, தமிழ் மக்களின் விடுதலையின் காட்சியே நமக்கு அவர் விட்டுப் போகும் மரபுரிமையும் சவாலாகவும் இருக்கிறது.

ஒரு அரசியல் வாதியாக திரு. செல்வநாயகத்தின் மேன்மையான குறிக்கோள்கள், தெளிவான இலக்குகள் தூரக்காட்சி காணப்பட்டது மாத்திரமன்று இவ்விலட்சணங்கள் அவருடைய சீவியத்திலேயே உருவமாயமைந்தது. மக்கள் அவர் பேசிய வார்த்தைகளிலோ, செய்த கிரியைகளிலோ இருந்த அவருடைய செயல்முறைச் சீவியத்தின்மூலமே அவருடைய இலட்சணங்களை நினைவு கூறுவார்கள் எட்மன்ட் யோர்ச் ஒருமுறை கூறினார்.

''எங்கள் மனதை ஒரே ஒரே இலக்கில் கவனம் செலுத்தும் பொழுது அவ்விலக்கும் சீவியமும் ஒன்றாய் இணங்கிச் செல்லவேண்டும் திரு. செல்வநாயகத்தில் தமிழரின் விடுதலை என்ற ஒரே இலக்குஅவருடையசீவியத்துடனேயே முன்றாய்ஒன்றுபட்ட நிலையைக் கண்டோம். திருவள்ளுவரும் கூறியபடி ''அஞ்சாமை, ஈகை, அறிவு ஊக்கம் இந் நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு'' திரு. செல்வநாயகத்தில், தலைவர்களில் காணப்படவேண்டிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இலட்சணங்கள் அவருடைய வாழ்க்கையிலும், பணியிலும் இயல்பாகவே தோன்றின. எனவே எல்லா அரசியல் வாதிகளுக்கும் இவருடைய சீவியம் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது.

தமிழ் மக்களின் தலைவனாக அவர்களின் விடுதலைக்காக மாத்திரமல்ல அவர்களின் ஐக்கியத்திற்காகவும் அவர் உழைத்து வந்தார். மக்களின் சுதந்திரமும், ஐக்கியமும் ஒன்றாகவே அமையும் இவற்றிற்காகவே திரு. செல்வநாயகம் தன்னைத் தியாகம் செய்தார். பண்டை ரோமர் மத்தியில் பாரம்பரியக் கதையொன்று உலாவியது. ஒரு தடவை ரோம அங்காடி மத்தியில் ஒரு வெடிப்பு ஏற்பட்டு அந்தப் பிளவு அகண்டு கொண்டு வந்தது மக்கள் கலக்கமுற்ற பொழுது மதகுரு ஒருவர் ஒரு ஆலோசனையைக் கூறினர். இந்தப் பிளவுக்குள் ரோம நகரில் உள்ள மிக விலையுயர்ந்த பொருளை எறியும் பொழுதே பிளவு மேவி நிரம்பும். மக்கள் விலையுயர்ந்த ஆபரணங்களையும் வேறு அரிதான பொருட்களையும் எறிந்தார்கள். பிளவு இன்னும் அகண்டு கொண்டே வந்தது. கடைசியில் ரோம துரை மகன் ஒருவர் தன் குதிரையில் ஏறி சவாரி பண்ணி அப்பிளவண்டை வந்து மக்களைப் பார்த்து ரோம பிரஜைகளே கேளுங்கள், ரோம் நகரதில் அதிகம் விலையுயர்ந்த பொருள் மக்கள் தங்களைத் தாமே தியாகம் செய்வதே என்றுசொல்லி குதிரையுடன் பிளவுக்குள் குதித்தான் உடனே பிளவு மூடப்பட்டு மேவப்பட்டது.

மக்கள் மதநியில் ஏற்படக்கூடிய பிரிவினைகள், பிளவுகள் தங்களைத் தாங்களே தியாகம் செய்யும் தலைவர்களின் பணியினாலேயே நீக்கப்படக்கூடும் திரு செல்வநாயகம் இப்படியான தியாகத்தின் மூலமே தமிழினதின் ஐக்கியதிற்காக உழைத்தார்.

15-ம் சங்கீதத்தை எழுதிவவர், ''கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில்தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? என்று கேட்டார். திரு. செல்வநாயகம் அவர்கள், ''உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகின்றவனாய் இருக்க முயன்று இப்பொழுது கடவுளின் கூடாரங்களில் தங்கவும் அவரின் பரிசுத்த பாவததில் வாசம் பண்ணவும் சென்றிருக்கிறார் என்று கடவுளுக்கே நன்றிசெலுத்துவோமாக.



# யாழ் பூங்காவில் பயங்கரக் கரடி!

—வர்ணம்—

சர்க்கஸ் கம்பனியிலிருந்து ஓடிவந்தவர். சர்க்கஸ் மனேஜரிடம் 'சேர், கரடி வந்துவிட்டது. கரடி வந்துவிட்டது' எனக் கத்தலானர்.

'கரடி வந்துவிட்டதா! நம்பமுடியவில்லையே! என்று ஆச்சரியப்பட்டார் சர்க்கஸ் மனேஜர். ஆனல் இதையொன்றும் பொலிஸ் அதிகாரி நம்பத்தயாராய் இல்லை.

'ஏய்! உண்மையாகத்தான் சொல்கிறாயா, கரடியை நீ நேரே பார்த்தாயா!' என்று அந்த ஆளை அவர் அதட்டலானர்! 'இவன் ஒரு காலமும் பொய் சொல்லமாட்டான். இவன்தான் சர்க்கஸ் மிருகங்களைக் கண்காணித்துக்கொள்ளும் ஆள், ஆரம்ப காலத்திலிருந்தே இவன் எங்கள் கம்பனியில் இருந்துவருகிறான். மிகவும் நம்பிக்கையான ஆள்' என்று பொலிஸ் அதிகாரியிடம் கூறிய மனேஜர், கரடி எப்படி வந்தது என்று விசாரிக்கிலானர்.

'வழமைபோல் மிருகங்கள் இருக்கும் கூடுகள் ஒவ்வொன்றுகப் பார்த்துக்கொண்டே வந்தேன். காலியாகக் கிடந்த அதன் கூட்டுக்குள் காணமல் போன கரடி இருந்தது. எப்படி வந்தது என்றே தெரியவில்லை. உடனே கூட்டின் கதவை இறுக்கிப்பூட்டிவிட்டு இங்கே ஓடிவருகிறேன்' என்றார் அந்த ஆள்.

சர்க்கஸ் கம்பனிக்குள் மட்டும் குறிப்பிட்ட நேரத்தில் வித்தை காட்டிக்கொண்டிருந்த கரடி இப்பொழுது கம்பனிக்காரர்களுக்கு மாத்திரமின்றி யாழ். நகர மக்களுக்கும் பொலிஸ் இலாகாவுக்கும் 'சர்க்கஸ்' காட்டிவிட்டு மீண்டும் திரும்பி வந்து ஒன்றுமறியாததுபோல் கூட்டுக்குள் குந்திக்கொண்டுவிட்டது!

கம்பனி மனேஜருக்கு ஒரு வகையில் எரிச்சலாக இருந்தது. இன்னொருவகையில் சந்தோஷம். ஏனென்றால் கரடிக்கு ஏகப்பட்ட விளம்பரம் கிடைத்துவிட்டது. இனிமேல் சனங்கள் விழுந்தடித்துக்கொண்டு இந்தக் கரடியின் விளையாட்டுக்களை வந்து பார்ப்பார்கள். ஏராளமான பணம் வசூலாகும்.

கம்பனி மனேஜர் மிகுந்த மகிழ்ச்சியோடு கம்பனிக்குப் புறப்பட்டார்.

பொலிஸ் அதிகாரிக்குக் கோபம் ஒருபுறம் கரடியைத் தங்களால் பிடிக்கமுடியாமல் போய்விட்டதே என்ற ஏமாற்றம் ஒரு புறம் என்றாலும் அதை அவர் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை.

உடனே கொழும்பு பெரிய அதிகாரிகளுக்கு டெலிபோன் போட்டார்.

கரடி பிடிபட்டுவிட்ட சங்கதியை அறிவித்தார்;

'மிகவும் சிரமப்பட்டு கரடியைப் பிடித்து சர்க்கஸ் கம்பனியிடம் கொடுத்துவிட்டோம்' என்று அறிவித்தார் பொலிஸ் அதிகாரி. இதுபற்றிய முழு விபரத்தையும் அறிக்கையாக அனுப்புவதாகவும் அவர் மேலிடத்துச் சொன்னார்.

பொலிஸ் அதிகாரி மேலிடத்திற்கு என்ன சொன்னார் என்பதைப் பற்றி சர்க்கஸ் கம்பனியோ பொதுமக்களோ கவலைப்படவில்லை. ஏனென்றால் அடுத்த நாள் முதற்கொண்டே கரடியின் சர்க்கஸ் விளையாட்டுக்களைப் பார்த்து ரசிக்கப் பொதுமக்கள் திரண்டு வர ஆரம்பித்தார்கள். சர்க்கஸ் காட்சிகள் 'ஓகோ'

(8-ம் பக்கம் பார்க்க)

# உங்கள் உணவுக் கால்வாயும் அதனைப்பாதுகாக்கும் வழிமுறையும்

# உணவை இப்படிச் சாப்பிடுங்கள்!

நம் உடல் செம்மையாகச் செயல்பட, நோய் நொடிகளை எதிர்த்து நாம் திடகாத்திரமாக வாழ, நல்ல உணவு தேவை-ஆனால் என்னதான் நல்ல உணவு இருந்தாலும் அந்த உணவிலுள்ள சத்துப்பொருட்கள் உடம்போடு சேராவிட்டால் என்ன பிரயோசனம். இச்சத்துப் பொருட்களை உணவிலிருந்து பிரித்து உடலுக்கு வழங்கும் உறுப்புக்கள் முதலில் செம்மையாகச் செயல்படவேண்டும். இது குழந்தைப் பருவத்திலிருந்தே கவனிக்கப்பட வேண்டிய ஓர் அம்சம். மருத்துவத் துறையில் பழுத்த அனுபவசாலியான டாக்டர் ச. இராசரத்தினம் அதற்கான சிறந்தவழிமுறைகளை இங்கேதருகிறார்.

உடல் இயற்கையின் ஓர் உன்னத படைப்பு. அதில் உணவுக் கால்வாய் ஓர் அபூர்வ தொழிற்சாலை. உடலின் நல்ல வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் தேவையான ஆக்கப் பொருட்கள் அனைத்தும் அங்கேயே ஆக்கப்படுகின்றன. அது அமைந்திருக்கும் அழகையும் செயல்படும் முறையையும் கவனித்தால் சிந்தனைக்கும் தெளிவுக்கும் எட்டாத பல அம்சங்கள் மறைந்து கிடப்பதைக் காணலாம். 'சுவிச்' இல்லாமல்இது தானே இயங்குகின்றது.

இத்தொழிற்சாலையிலும் 'முறிவுகள்' ஏற்படுகின்றன. (Breakdown) அவதியின்றி ஆராய்ந்தால் சிறிது சிந்தித்தால் இவை வெளியாகும்.

எனவே இந்த உன்னத தொழில் நிலைய அமைப்பைப் பற்றி நாம் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும். முறிவுகள் ஏன் ஏற்படுகின்றன என்பது பற்றியும் தெரிந்திருக்க வேண்டும், அப்படியாயின் மட்டுமே இயற்கையோடு ஒத்து வாழ்ந்து அமைப்புக்கு அமைய நடந்து நோய்களைத் தூரத்தில் நிறுத்தலாம். மருத்துவர்களுக்கு 'இங்கு வேலையில்லை' என்று சொல்லலாம்.

## மருந்துகளால் வரும் நோய்கள்

மருத்துவன் பாக்கெற்றுகளிலும், போத்தல்களிலும் கை ஏற்று நிரம்பத்தரும் மருந்துகளின் மூலமே இல்லாத வேறுநோய்களையும் ஏற்படுத்திவிடுகிறார்கள். அவர்களை நாம் எட்ட வைக்க எத்தனிக்கத்தான் வேண்டும்.

அமெரிக்க ஆஸ்பத்திரிகளில் 100,க்கு 20 கட்டில்களை நிரம்புபவர்கள் மருந்துகளால் ஏற்பட்ட நோய்களை உடையவர்கள் என்று அண்மையில் கணக்கிடப்பட்டிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியில்மருத்துவத்துறையில் உச்சியில் நிற்கும் ஒரு நாட்டின் நிலை இதுவாயின் எங்கள் நாட்டில் எப்படியிருக்கும். எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை.

'இள வயது நடுக்கம், சுற்ற வர நாம் காணும் முட்டில் வருந்தும் சிறுபிள்ளைகள், இரத்தக்குறைவு, வயிற்றுப்புண்கள்-இவையெல்லாமே மருந்துகளாலும் வரக்கூடியவைதாம். எனவே மருந்தேயில்லாது நாம் வாழ்வதற்கு முயற்சிசெய்தல் அவசியமாகின்றது.

உணவுக்கால்வாய்க்குப் புனல்போன்றது எங்கள் வாய். கைகொடுக்க வாய் உடனேயே தன் தொழிலை ஆரம்பிக்கின்றது.

பற்கள் முளைக்குமுன் பாலகனுக்குத் தாயின் பாலே உணவு. சேயின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டப் பொருட்கள் எல்லாமே அங்கே பொதியப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமன்றி தொற்று நோய் தடுப்புச் சக்திக்குப் பிள்ளைப்பருவத்தின் தேவைக்கேற்ப அதில் இருக்கின்றன. முதல் ஆறுமாத கால வளர்ச்சிக்குத் தாயின் பாலை விடவேறெதுவுமே தேவையில்லை எனலாம். இது இவ்வாறிருக்க பிறந்த நாளே வேறு பாலை குழந்தைக்குப் புகட்டப்பணிக்கும் டாக்டர் மாரை, தனியார் வைத்திய சாலை அதிபர்களை என்னென்று அழைப்பது? தங்களால் விளையும், திருத்தி அமைக்கமுடியா இத்தீமைகளை இவர்கள் எப்பேரது உணர்வார்களோ?

தாயின்பாலைப் பதப்பண்ணப் பற்கள் தேவையில்லை, எனவே பிறக்கும் பொழுது பற்களுமில்லை. ஆனால் அவை முரசின் அடிப்படையில் வெளிவர ஆயத்தமாயே யிருக்கின்றன. ஆறுமாத காலம்போக அவை மெல்லமெல்ல வெளிவரும். கடின உணவுகள் சிறிது சிறிது இனித்தேவை என்பதை அவை உணர்த்தும். பால் பற்கள் என்பார்கள். மெல்லியவை- இலகுவில் உடையக் கூடியவை. இக் காலத்தில் தேவைப்படும் உணவும் மெல்லியனவே. இலகுவில் சேரணிக்கக் கூடியவை. இந்தச் சின்னஞ்சிறு பற்கள் காலகதியில் தாமே விலகி வெளிவரக்காத்திருக்கும். நிரந்தரப் பருத்த பலத்த பற்களுக்கு இடமளிக்கின்றன. வயதுக் கேற்ற உணவு. நன்கு கடித்து சுவைப்பதுக்கும் ஏற்ற உணவு இப்போ தேவைஎன்பது தெளிவாகிறது.

## வாயில் என்ன நடக்கிறது

பால் உணவை ஏற்றவுடன் நாவானது தான் சுவைத்துக் களிப்பதோடு நில்லாது தாமதமின்றி தொண்டைக்கூடாக அதை இரைப்பைக்குள் தள்ளுகின்றது. கடின உணவுகளை பற்கள் கடித்தும், நறுக்கியும் அரைத்தும் கொடுக்க நாதானும் சுவைத்து உருட்டியும் பிரட்டியும கொடுக்கின்றது. ஆங்காங்கே வாயில் அமைந்திருக்கும் சுரப்பிகள் தேவைக்கேற்ப உமிழ்நீரைச் சொரிகின்றன. காதுகளின் கீழ் அமைந்திருக்கும் பரோட்டிட்ச் அலகின்கீழ் காணப்படும் சப்மாக்கிலறி நாக்கின் கீழ் கிடக்கும் சப்லிங்குவல்டி நல்ல ஊணின் நினைவே, மணமே, கேழ்வியே இவைகளை உமிழ்நீரைச் சுரக்க ஊக்குவித்துவிடும்! வயது வந்தவர்களில் 24 மணித்தியாலங்களில் இருபது அவுஞ் போல் உமிழ்நீர் சுரக்கின்றது. வாயிலே இவைகளால் பசையாக்கப்பட்ட உணவு தொண்டைக்குள்ளால் இரைப்பைக்குள் தள்ளப்படுகின்றது. எனவேதான் ஆறுதலாய்ச் சுவைத்துப் பற்களுக்கும், நாவுக்கும் வேலைகொடுத்து உணவை உட்கொள்ளல் வேண்டும். அவசரமாய் விழுங்கல் சேரணக் குறைவை வரவழைப்பதாகும். உணவின் முழுப் பலனையும் உடம்பும் பெறமாட்டாது. உண்பதும் ஒரு கலையெனக் கணிக்கவேண்டும். உணவை ஆறுதலாய் ஐந்துவிரல்களாலும் குழைத்து அளையாய் அள்ளி, கை வாய்க்குக் கொடுக்க தலை குனிந்து வாய் கவ்வித் தன் பணியை ஆற்றவேண்டும். விரல்களும் உள்ளங்கையும் சேர்ந்து அப்படியே அப்பி உணவை எடுத்து எறியத் தலை நிமிர்ந்து வாயை ஏந்தவைக்கக்கூடாது. பார்ப்பதற்கு அழகாயுமிராது. அருவருப்பையும் தருகின்றதன்றோ?

## பற்களைப் பாதுகாக்க

சேரணத்துக்கு உதவும் இந்தப் பற்களை முளையிலிருந்தே நாம் சுத்தமாயும் பாதுகாப்பாயும் வைத்திருக்கவேண்டும். பாற்பற்களைத் தும்புகொண்டு பற்பசை பூசி விளக்குவது ஒரு பரிதாபமான செயலாகும். ஒத்தமான விரல்களே போதுமானவை. அன்னையின் அன்பான அரவணைப்பில் இது நடக்கவேண்டும். வேண்டுமாயின் உப்புத் தண்ணீரில் தாய் தன் விரலை நனைத்துப் பற்களைத் தடவினாலே போதுமானது. நிரந்தரமான பற்கள் முளைத்த பின்பும் தும்பும் பசையும் தேவையேயில்லை. உமிக் கரியும் (சாம்பலாக முன் தூளாக்கப்பட்டது) கறி உப்பும் 2: 1 விகிதம் கலந்து வைத்துக்கொண்டால் காலை இரவு தேவைப்படி சுத்திகரித்

(9-ம் க்கபம் பார்க்க)

டாக்டா. ச. இராசரத்தினம்

---

# துணிச்ச—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிகைகளுக்கு அரசியல்தொடர்பான பல கட்டுரைகள், கடிதங்களும் எழுதியிருக்கிறார். கடந்த கால அரசியல் பற்றி சுருக்கமாக எனக்குக்கூறி, அதில் தான் எடுத்துக்கொண்ட பங்கையும் விளக்கினார். இளம் சந்ததிகள் அறிந்துகொள்ளாத எத்தனை விஷயங்களை அவர் கூறினார். இவற்றையெல்லாம், இளம் சந்ததிகள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என எனக்குத்தோன்றியது. என்னை மிக அன்போடு உபசரித்தது, பத்திரிகையாளருக்கு அவர்எவ்வளவு மதிப்பளிக்கிறார் என்பதை எடுத்துக் காட்டியது.

## தனிமனிதனாக...

நல்லூரில், கடந்தமாதம் அவரைச்சந்தித்தேன். தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். நான் சென்றிருந்த சமயம் சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்தார். அருகில் அவரது உதவியாளர் ஒருவர் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார். நான் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். நீங்கள் தேர்தலில் வெற்றிபெற்றால் என்ன நடக்கும்? என்றேன். அவர் பலமாக சிரித்தபடி 'அதற்குப் பிறகு தான் விளையாட்டுஇருக்கிறது' என்றார்.

'பெரும்பான்மைப் பலம் இல்லாமல் ஆட்சிமன்றத்தில் என்ன செய்யமுடியும்?' என்றேன். (தொடரும்)

---

# ஒரு நல்ல நண்பனுக்கு—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சனம் செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டு பதுளையை அடைந்தோம். பதுளையில் அன்று இரவே விழா நடைபெறுவதாகவும் இருந்தது. விழா நடைபெறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாகவே பதுளையை அடைந்ததால் என்உறவினர் வீட்டில்முகம் கழுவி உடையை மாற்றிக் கொண்டு விழா நடைபெறும் இடத்திற்கு விரைந்தோம்.

## ம. பொ. சி. பாராட்டினார்

நாங்கள் எதிர்பார்த்த அளவு ஜனக்கூட்டம் இருக்கவில்லை. ஜெய்சங்கர் பெயர் பிரபல்யம் அடையவில்லை என்பதை அது காட்டிற்று. இருந்தும் மனம் தளராது ஜெய்சங்கர் விழாவில் கலந்து அற்புதமான ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதைக் கேட்ட ம. பொ. சி. அவர்கள் இப்படி நல்லா பேசிறீங்களே என்று பாராட்டினார். விழா முடிந்ததும் பதுளை வாடிவீட்டில் இராப்போஜன விருந்து. இவையெல்லாம் முடிவடைந்ததும் மீண்டும் கொழும்புக்குப் புறப்பட்டோம். இரவிரவாக வந்ததால் வந்ததும் வராததுமாக ஜெய்சங்கர் என் படுக்கையில் படுத்துதூங்கி விட்டார். எவருக்கும் தெரியாது. ஜெய்சங்கர் என் வீட்டில் தங்கி இருக்கிறார் என்று தெரிந்திருந்தாலும் அப்பொழுது அவரை பெரிதுபடுத்தி பார்க்க குழுமியிருக்கமாட்டார்கள். இன்று வந்தாலோ அவரை நிம்மதியாக தூங்கவிட்டிருக்கமாட்டார்கள். அன்றே அவர் திரும்பிப்போக பிளேனில் டிக்கட் புக் பண்ணியிருந்ததால் நண்பகல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு விமானநிலையத்திற்கு புறப்பட்டோம். போகும்பொழுது அப்பொழுது சென்னையில் படித்துக்கொண்டிருந்த என் மூத்த மகனுக்கு சாப்பாடு கட்டிக்கொடுத்தேன். சென்னையில் இறங்கியதும் அவனுடைய ஹாஸ்டலுக்குச் சென்று அந்தச் சாப்பாட்டுப் பார்சலை ஒப்படைத்துவிட்டுத் தான் தன்வீடு சென்றிருக்கிறார் ஜெய்சங்கர்.

நல்லதோர் நண்பனுக்கு ஓர் உதாரணமாக விளங்குபவர் ஜெய்சங்கர். அதன்பின் ஜெய்சங்கரைப் பலமுறை சென்னையில் சந்தித்தேன். கடைசியாக நான் அவரைச் சந்தித்தது ஒரு கூட்டுத் தயாரிப்பு விஷயமாக இது நிச்சயம் இடம்பெறும் என்று தான் நானும் ஜெய்சங்கரும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் கடைசி நேரத்தில் இலங்கைததயாரிப்புக்கு உதவுவதாக இருந்த என் சிங்கள நண்பர் பின்வாங்கிவிட்டார். அதனால் எங்கள் ஆசை நிறைவேறவில்லை. ஆனால் ஜெய்சங்கர் இன்னமும் என்னோடு தொடர்பு வைத்துக்கொண்டு தான் இருக்கிறார்.

---

# கரடி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வென்று நடக்கத்தொடங்கின.

●

யாழ். பஸ் நிலையத்தில் கிடந்த கரடித் தோலின் மர்மம் பற்றி பொலிஸார் என்னென்னவோ துப்புத்துலக்கிப் பார்த்துவிட்டார்கள். ஆனால் எதுவித தகவலும் கிடைக்கவில்லை. அதுபோலவே ரயில் நிலையத்தில் டாக்ஸியில் ஏறிப் போன கரடி மனிதன் பற்றியும் தகவல் கிடைக்கவில்லை. அதனால் இந்த இரு கேஸ்களையும் மேலும் தொடராமல் அப்படியே விட்டுவிட்டார்கள்! அத்துடன் அதற்குப் பிறகு பொலிசாருக்குத் தலையிடி கொடுக்கும்படியாக கரடிப் பிரச்னையொன்றும் ஏற்படவுமில்லை.

●

'இந்தச் சம்பவம் எப்போது நடந்தது என்பது பற்றிக் கடைசியில் கூறுவதாக ஆரம்பத்தில் கூறினேன், அல்லவா? அவ்வளவும் எனது கற்பனையில்தான் நடந்தது. வேறு எங்கே இப்படி நடந்திருக்க முடியும்? (முற்றும்)

---

# இயற்கை என் தெய்வம்

எழினி சி. சிவநாதபிள்ளை

## நிலம்

ஆக்கமளிப்பாய் உன்னில் அன்புகொண்ட
மன்னுயிர்க்கு
காக்க வரைநீதியிலே கரந்தொழுகாய் — நீக்கமற
பண்பட்ட தானஞ்செய்பக்கு வத்தால்நின்னையிங்கு
கண்கண்ட தெய்வமென்றேன்காண்.

## நீர்

ஆதித்தன் சேர்த்துவிடுமற்பு தத்தின்சாயவினல்
நீதிக்கு நின்னுவமை நீயேதான் — பேதித்து
நம்மைவளர்த்தெடுக்கும் நன்னீரேயென் தெய்வம்
செம்மையற முன்னகத்தேதான்!

## தீ

அழிப்பாய்மற நெறியையாக்குவிப்பாய்
நல்லுணவை
பழிக்கும்பயமற்ற பண்புகொண்டாய் — தெளிக்கும்
செங்கதிரோன் தன்மையினைச் செறிவாலடக்கியதால்
வெங்கதிரே நீயுமென்றன் தெய்வந்தான்.

## காற்று

நீயின்றேல்நாமில்லை நீள்புவியில் நின்னையென்றும்
நாயிற்கடையேன் நயக்கின்றேன் — நோயின்றி
மலைக்குமேல் நீரினிலே மான்புபெறுமூச்சினிலே
நிலைப்பதனால் நீயுமென்றன் தெய்வந்தான்!

## ஆகாயம்

நிலநிறம்மேற்கண்டேன் நின்சாயலென்றிட்டேன்
காலவரையறை யேகானது — கோலமுற்ற
நின்னகத்தேகோட்டை கட்டநினைக்கிறேன்
நீதெய்வம்
பின்நகைப்பாய் என்னிலை தான்கண்டு

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி — சரோஜாதேவி
ஆலயமணி

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
பாபு

103 வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஃ நாகேஸ்வரராவ்
ஃ சாவித்திரி
தினசரி 4 காட்சிகள் நடித்த
எங்கள் வீட்டு மகாலட்சுமி

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலை மோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

REGAL (JAFFNA)
Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் [யாழ். நகர்]
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 [யாழ். நகர்]
விஜயகுமார் — லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

## உணவை...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

துக்கொள்ளலாம். இந்தத் தூளுடன் ஒரு முறைக்கு இரண்டு விரல்களால் கிள்ளும் அப்பச்சோடாவும் சேர்த்துக்கொள்ளலாம். பற்களைத் துலங்கச் செய்யும் இந்தத் தூளால் சிறிது காலம் துலக்கி அதன் இதத்தை அனுபவித்தவர்கள் பற்பொடிக்கும் பசைக்கும் காசை வாரி இறைக்க மாட்டார்கள். பற்களை இந்த முறையில் பேணிக் காத்தால் நல்ல முதுமை எய்தும்வரையும் பற்கள் பழுதடையமாட்டாது. முரசு கரையமாட்டாது. 30 வயதுக்கு முன்பே பற்கள் ஆட்டங்கண்டு விழவும் மாட்டா. உணவுக்கு முன்பும் பின்பும் பற்கள் விரலால் விளக்கப்பட்டு நீரால் அலசிக் கொப்பளிக்கவேண்டும். இந்தச் சீரிய பழக்கம் வளர்க்கப் படவேண்டும். வாயை நீரால் அலசி இருந்த இடத்திலிருந்தே விழுங்குவது அருவருத்து ஒதுக்கவேண்டியதோர் பழக்கம். பாக்கு வெற்றிலை போடல், புகைத்தல், வாயின் நுண்ணிய அமைப்புக்களைப் பாதிக்கவேசெய்யும். அவைகளின் செயல்களுக்கு இடையூறு விளைக்கும். அதோடமையாது கொடிய புற்றுநோய்க்கும் ஆளாக்குகின்றன. இந்நோய் வாய் நின்று குதம் வரை (மூலம்) எவ்விடமும் ஏற்படலாம். அதன் பரிதாப விளைவுகளை நினைக்கவே மனம் கூசும். தாங்கொணு தோ உண்டாகும், பசிக்கும். ஆனுல் உண்ண இயலாது. விடாய் எடுக்கும். ஆனுல் நீர் விழுங்க முடியாது. உணவு, நீர் இன்றியே உயிர் நீங்க நேரிடும். இந்தப் பரிதாப நிலையில் பெற்ற பிள்ளைகளே தம்மைப் பேணி வளர்த்த பெற்றோருக்குச் 'சாகக் கொடுக்கும்' மருந்து தேடிவருவார்கள். இது வைத்தியரின் அனுபவம். வாயை, நாக்கைத் தம் வேலையைச் செவ்வனே செய்ய உதவுவதற்கு இந்தத் தீய பழக்கங்களிலிருந்தும் நாம் விலகிக் கொள்ளல்வேண்டும். இந்தக் கொடிய நோய் காலங்கடந்தே உருவாகுமாயினும் பழக்கத் தொடக்கத்திலேயே உணவுப் பிரியம், உணவுச் சீரணம் பாதிக்கப்படும். வாய் வறளும். தொண்டை காயும். உமிழ்நீர்ச் சுரப்பிகளும் தம் கடமையைச் சரிவரச் செய்யத் தடையாயிருக்கும். எது வேண்டும்? கெட்ட பழக்கங்களும் அவைகளைத் தொடரும் துன்பங்களுமா? அல்லது நோயில்லாத நீடிய சீரிய வாழ்க்கையா?

(இன்னும் வரும்

## பெண்களின்—

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

னும் நூலாக வெளியிட்டார், கிறிஸ்தவ ஆராதனைகளிலும் பாட்டுக் கச்சேரிகளிலும் இவருடைய கீர்த்தனைகள் அதிகமாக விரும்பிப்படிக்கப்படுகின்றன.

சாதாரண பொதுமக்கள் தமிழைப் படிக்க வேண்டும்; அதன்மூலம் சத்தியபோதனைகளையும் உயர் பண்புகளையும் கண்டறிய வேண்டுமென்பதே இவரது கருத்தாகும். அக் கருத்தோடு அவர் ஆக்கிய கீர்த்தனைகளும் உரைநடை நூல்களும், நாவல்களுமே தமிழுக்கு அவர் செய்த திருத்தொண்டுமாகும்.

(தொடரும்)

## இரட்டை—

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

கடைசி மூச்சுவரை தமிழ் இலக்கிய வானிலே ஒரு முழு நிலாவாகவே தேய்பிறையில்லாமல் கல்கி ஒளி வீசினுர். முழு மதியாகவே வானிலே எழுந்தார். மறையும்போதும் முழுமதியாகவே மறைந்தார். எனவே நம் நினைவில் அவர் முழுமதியாகவே எப்போதும் வாழ்ந்து வருகிறுர்.

......

## கணபதி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்னகலசம், இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறைமுடியர். மடிமீது எழுந்தருளியிருக்கின்ற-தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.

14. விஜய கணபதி:- பாசம், அங்குசம், தந்தம்,மாம்பழம், இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

15. நிறுத்த கணபதி;- இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுவர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம்,

(10-ம் பக்கம் பார்க்க)

விசேஷ அறிவித்தல்

சகல வித Boiler திருத்தும் வேலைகளையும் வெள்ளை இரும்பு, பித்தளை, அலுமினியம், சீனச்சட்டி, பியூட்டர், என்ஜின் புளோக். வீல் HUB, லொறி பொடி ஒட்டல்களையும் கிராங் ஷாப்ட் நிரப்புதலையும் மிகக்குறைந்த செலவில் இலங்கையின் தலை சிறந்த வெல்டருள் ஒருவராகிய

K. D. தாஸா
பாலன் அயன் வேர்க்ஸ்
409, கே. கே. எஸ். ரேட்டில்

செய்து கொடுக்கின்றுர்.
அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி ஞாயிறு 10-30
பொம்மைக் கல்யாணம்

RIO (Jaffna)
NOW SHOWING
Daily 4 Shows
CITY OF DEATH
(மரணத்தின் மாநகரம்)
(புத்தம் புதிய பிரதி)

மாநகரம் மறைந்து முடிந்தது. அதைத் தாங்கிய நாடும் மங்கி மறைந்தது. கொள்கைக்காக இறந்து பட்ட கோட்டம். 100 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த உண்மைக் கதை இந்த முறையிலே அழகும் ஆடம்பரமும் நிறைந்த காட்சி இதற்கு முன்னர் வெண்திரையில் வந்ததில்லை'
மனிதன் இறந்துபடும் வரை ஆண்டவன் பெயரால் மதமும் மதமும் மோதுவதைக் காணுங்கள்.
மீண்டும் இது நடக்குமா?
பதில் உங்களுடையது!
(Cinema Scope) (கண்கவர் வர்ணம்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி
(இரு வேடங்களில்) விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்!
யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக! நீமயிலேறி வருக!

திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணுத கண்ணென்ன கண்ணே

தென்னகத்தில் திரையிடப்பட்ட திரையரங்குகளில் கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி முழக்கம் இட்டதே
தேவரின் "திருவருள்"
தினசரி 4 காட்சிகள்
ராஜா யாழ்நகர்
ஏ. வி. எம். ராஜன், கிருபானந்தவாரியார், நாகேஷ், சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன், ஜெயா, பேபி இந்திரா
நடித்த
தேவரின் திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்; ஆர். தியாகராஜன்



## சட்டமும் சமுதாயமும் — 16

# டாக்குத்தருடைய மெடிக்கல் சேட்டிபிக்கேற்றை ஏற்க முடியாதாம்

**செ. சிறிக்கந்தராசா**

முடி நாகராயர் ஒரு பெரிய முதலாளி. அவரிடம் ஒரு லொறி இருந்தது. மூன்று வருடமாக நன்றாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் திடீரென்று படுத்துவிட்டது. வாகன டாக்குத்தரான மெனிக்கா என்ற மெக்கானிக்கரைக் கூட்டிவந்து காட்டியபோது, அவன் கொச்சைத் தமிழும் கொலையுண்ட இங்கிலிசுமாக ஏதோ சொன்னான். தன்னுடைய கராச்சிலே விட்டால், மூன்று நாளிலே திருத்திவிட முடியும் என்று கூறினான். முடிநாகராயர் ஓம்பட்டு தமது லொறியை மெனிக்காவின் கராச்சிலே கொண்டுபோய் விட்டார். மூன்று நாள் என்று சொன்னது மூன்று மாதமாயிற்று. மூன்றுமாதம் இழுத்தடித்து போதாதென்று, சிவபெருமான் விறகுக்கு விலைசொன்னமாதிரி, செப்பனீட்டுச் செலவாகப் பெருந்தொகை கேட்டான் மெக்கானிக். முடிநாகராயர் இணங்கவில்லை; மெனிக்கா, 'கூலியைத் தந்தாலொழிய லொறியை எடுக்கவிட மாட்டேன்''என்று மறுத்துவிட்டான். லொறியின் பெறுமதியான ஐம்பதினாயிரம் ரூபாவைத் (ரூபா 50,000/-) தர மெனிக்கா மறுக்கிறார் என்று கூறி, முடிநாகராயர் வழக்குத் தொடுத்தார். செப்பனீட்டுக் கூலியைத் தராமையினாலே தான் லொறியை ஒப்படைக்கவில்லை என்று கூறி, மறுமொழி அனைத்தான் மெனிக்கா.

விளக்கத்துக்கென நாள் குறிக்கப்பட்டது. வழக்கு நாளும் வந்தது. முடிநாகராயர், புற்றளைப்பிள்ளையாரைக் கும்பிட்டு வெற்றி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கோட்டடிக்குப் போனார். கோட்டிக்குள் நுழையமுன், கோட்டடிப்பிள்ளையாருக்கும் ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போனார். நீதிமன்றத்தில் வழக்குக் கூப்பிடப்பட்டதும் முடிநாகராயரின் சட்டத்தரணி எழுந்து ''வழக்காளியின் சார்பில் நான் தோன்றுகின்றேன் ஐயா''என்றார். மெனிக்காவின் சட்டத்தரணி வடிவேலர் எழுந்து''எதிராளிக்காக நான் தோன்றுகிறேன்; என்னுடைய எதிராளிக்கு உடல் நலமில்லை. அதற்கான மருத்துவச் சான்றிதழை இதோ சமர்ப்பிக்கிறேன்''என்றார். ''சான்றிதழை வாசியும்'' என்றார் நீதிபதி. மெனிக்காவுக்கு நெஞ்சுநோ இருப்பதால், அதாவது Fibrositis of the Pectoral Muscle இருப்பதால், அவர் நாளை நடைபெற விருக்கும் நீதிமன்ற விளக்கத்திற்கு வர முடியாதிருக்கிறார். அவருக்கு இன்றிலிருந்து மூன்று வாரங்களுக்கு ஓய்வு தேவை''

வழக்காளியின் சட்டத்தரணி விடவில்லை. வாங்கிய காசுக்கு வாயை ஆட்டினார்: ''ஐயா உந்த மெடிக்கல் சேட்டிபிக்கேற்றை உண்மையானதென நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்''என்றார். நீதிபதி வழக்காளி பக்கச் சட்டத்தரணி சொன்னதை நம்பியோ என்னவோ, எதிராளியின் சட்டத்தரணியின் வேண்டுதலைமறுத்தார். மறுத்ததும் எதிராளியின் சட்டத்தரணி, அந்த வழக்கிலிருந்து தாம் ஒதுங்குவதாகக் கூறி விலகிக்கொண்டார்.

நீதிபதி, வழக்காளியின் சட்டத்தரணியைப் பார்த்து ''நீர் தயார்தானே? உம்முடைய வழக்கை எடுத்துரைக்கலாம்'' என்றார். மறுகட்சியில்லா விளக்கமாக (Ex parte trial) வழக்கு விளக்கம் நடைபெற்றது. வழக்காளிக்குச் சாதகமாகத் தீர்ப்பும் கிடைத்தது. மெனிக்கா, கவன்றான்.

இந்த வழக்கை விளங்கும் நீதிபதி, நீங்களாகஇருந்தால், உங்களுடைய தீர்ப்பு இதை விட வேறானதாக இருக்குமா? வாசகர்களே சிந்தியுங்கள். சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்த பின்னர் இதனைத் தொடர்ந்து படியுங்கள்.

இந்த வழக்கு, விளக்கத்திற்கென குறிக்கப்பட்ட முதல் தேதி இதுதான். இந்தத்தேதியில் மருத்துவச்சான்றிதழைச் சமர்ப்பிக்கிறார் எதிராளியின் சட்டத்தரணி. இந்த மருத்துவச் சான்றிதழ் பொய்யானது என்கிறார் வழக்காளியின் சட்டத்தரணி. பொய்யானது என்று வழக்காளி பக்கச் சட்டத்தரணி கூறினால், அதனை மெய்யானது என்று மெய்ப்பிக்கும்படி எதிராளியின் சட்டத்தரணியைக் கேட்கவேண்டியதுதான் நீதிபதியின் பிரதான கடமை. நீதிபதி இந்தக் கடமையிலிருந்து தவறிவிட்டார். அன்றைய நாளுக்கான வழக்குச்செலவை வேண்டுமானால் அவர் எதிராளியிடம் கேட்டிருக்கலாம். இதைவிடுத்து, மறுகட்சியில்லா விளக்கத்தை மேற்கொண்டது பிழையான செயல்; அநீதியான செயலும்கூட. நீதிபதியின் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்து, வழக்கை மீளவிளங்குமாறு செய்விக்கும், உரிமை எதிராளிக்கு உண்டு; மேன்முறையீட்டில் வெற்றியும் நிச்சயம்.

மேற்படி வழக்கு புதியசட்ட அறிக்கையிலுள்ள தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டது. கதையில் வரும் பெயர்களும் விவரணங்களும் கற்பனையே.

---

## அறிவித்தல்

**வேம்படி மகளிர் கல்லூரி**

**பழைய மாணவிகள் சங்கம்**

மேற்படி சங்கத்தின் புனரமைப்பு பொதுக்கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் 28-5-77 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். பழைய மாணவிகள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். அங்கத்துவ வருட சந்தாப்பணம் ரூபா 5/-

ப. ஆறுமுகம்

அதிபர்

6184

---

## கணபதி—

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன் போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்!

16. ஊர்த்துவ கணபதி:- நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ண வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

17. ஏகாட்சர கணபதி:- செந்நிறமானவர். செம்பட்டாடையர், செம்மலர் மாலையர். பிறை முடியர், முக்கணர். குறுந்தாளர். குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவைதாங்கிய கரங்களையுடையவர். யானைமுகவர். பதுமாசனத்திருப்பவர். பெருச்சாளிவாகனர். (தொடரும்)

---

## சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




---

## தமிழர் கூட்டணி காரியாலயம் முன்

# கா. பொ.வை ஆதரித்தும் எதிர்த்தும் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு பண்டிதர் கா.பொ.இரத்தினத்தை கூட்டணி அபேட்சகராக நிறுத்த வேண்டாம் என்று ஒரு கோஷ்டியினரும், பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு ஆதரவாக மற்றொரு கோஷ்டியினரும் நேற்று கூட்டணி காரியாலயத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்

பண்டிதர் இரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளராக நியமிக்கப்படுவதை ஆட்சேபித்து இருநூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்திற்கு வந்து ஆட்சேபம் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறையிலிருந்து லொறிகளில் வந்த இளைஞர்கள் கோஷ்டி யாழ். சின்னக் கடைச் சந்தியிலிருந்து திரு. அ. தவநாதன் தலைமையில் சுலோக அட்டைகளுடன் ஊர்வலமாக காரியாலயத்திற்கு வந்தனர்.

ஊர்வலத்தை நடத்திவந்தவர்கள் கூட்டணிநிர்வாகக் காரியதரிசி திரு. தர்மலிங்கத்தைச் சந்தித்து மகஜர் சமர்ப்பித்தனர்.

ஊர்காவற்றுறை தொகுதிக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறும், விரும்பினால் திரு ஆலால சுந்தரத்தை நியமிக்குமாறும் அக் கோஷ்டியினர் தெரிவித்தனர்.

பண்டிதர் இரத்தினம் நியமிக்கப்படும் பட்சத்தில், தனிநாட்டுக்கொள்கையை ஆதரிக்கும் திரு. வ. நவரத்தினத்தையே தாங்கள் ஆதரிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### ஆதரவாளர்கோஷ்டி

இக் கோஷ்டியினர் கூட்டணி காரியாலயத்திலிருந்து வெளியேறிய சமயம், பண்டிதர் கா. பொ. இரத்தினத்தை ஆதரித்து மற்றொரு கோஷ்டியினர் தீவுப்பகுதி தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் திரு. பாலச்சந்திரன் தலைமையில் கூட்டணி காரியாலயத்திற்கு கோஷங்கள் எழுப்பிய வண்ணம் வந்தனர். இந்த ஊர்வலத்தில் சுமார் 100 இளைஞர்கள்வரை வந்தனர்.

வண்ணை ஆனந்தனிடம் இவர்கள் தமது மகஜரைச் சமர்ப்பித்தனர். (கி-கு-இ)

---

## செல்வாசிலை: இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழர் கூட்டணித் தலைவர் அமரர் தந்தை செல்வாவுக்கு காங்கேசன்துறையில் சிலை நிறுவுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறும்.

---

## சட்ட—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் என்ன சொல்கிறார் என்பதை அறிவதற்கு அவரிடம் கேள்வி கேட்கவேண்டிய அவசியம் நீதிபதிகளுக்கு இருக்கவில்லை.

அமரர் செல்வநாயகம் அரசியலில் நேர்மையுடன் உழைத்து பெரும்பாலான மக்களின் நம்பிக்கை பெற்ற தலைவராக விளங்கினார்.

அவரது தகனக் கிரிகைகள் நடைபெற்றபோது இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் சேர்ந்த மக்கள் முன் எப்பொழுதுமில்லாதவாறு திரண்டிருந்தது அவரது பெருமதிப்பை உணர்த்திற்று.

### ஒருபோதும் மறக்கமாட்டார்கள்

தாம் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யாத அவரை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திரு. ஏட்வி பெரேரா பேசுகையில் கூறியதாவது:-

"சட்டத்துறையில் புகழ்பெற்று விளங்கிய அமரர் செல்வா, ஒரு கிறிஸ்தவராக இருந்தபோதிலும் இந்து மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ் சமுதாயத்திற்குத் தலைமை வகித்துப் பெருமை பெற்றுள்ளார்.

அவருடைய உயரிய பண்பே அவருக்கு இப்பெருமையைத் தேடித்தந்தது. (இ)

---

## சுதந்திர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியல் தாமதமாகிவருவதாகவும் கூறிய அவர், கூட்டணிக்கும் சுதந்திரக்கட்சிக்குமிடையில் தேர்தல் உடன்பாடு ஏற்படும்பட்சத்தில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தொகுதிகளை இருசாராரும் பங்கிடு செய்துகொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ம-க-இ)

---

## 422 தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாகும்

கொழும்பு, சனி

422 தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது. (இ)

---

## நல்லூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சுமணன் இறுதி அஞ்சலியில், கலந்துகொள்வதற்காக திரு. எஸ். தொண்டமான் அங்கு சென்றிருந்தார். அதனால் அவர் இன்று நடந்த கூட்டணி நியமனக்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. நாளை நியமனக்குழுக் கூட்டத்தில் திரு. தொண்டமான் கலந்துகொள்வார். (க-ம)

---

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதாக கழகத்தலைவர் திரு. வ. நவரத்தினம் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் கழகத்தலைவர் திரு. வ. நவரத்தினம் தான் போட்டியிடாது கழகச் சார்பில் வேறு அபேட்சகரை நியமிக்க விரும்பிய போதிலும் கழகச் செயற்குழுவிலும், நியமனக் குழுவிலும் பெரும்பாலும் பலர் இதனை ஆட்சேபித்தனர். ஊர்காவற்றுறைத் தொகுதி ஆதரவாளர்கள் பலர் திரு. நவரத்தினம் வீட்டுக்கு விரைந்து வந்து கழகத்தலைவர் திரு. நவரத்தினமே ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட வேண்டுமென்று வற்புறுத்திய தன் பேரில் திரு. நவரத்தினம் போட்டியிட சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanaadu, Telephone 389. Registered as Newspaper in Sri Lanka.